உ

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஞூ ஆவணி மீ 26 ஆம் உ
(1889)

பிரதி விலை: ரூபா 10
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

# இந்து சாதனம் (HINDU ORGAN)

புத்தகம்: 112

விஷு வருடம் ஆடித் திங்கள் 18 ஆம் நாள்
(03-08-2001) ஆடிப் பூரணை

இதழ்: 04

## சைவப்புலவர் சங்கப் பட்டமளிப்பு விழா:

## சைவசமயக் கோட்பாடுகள் பற்றிய சந்தேகங்களுக்கு திருமுறைகள், சித்தாந்த சாஸ்திரங்களின் அடிப்படையில் விளக்கங்களை அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்துக.

# சைவ மரபு பேணுக!

## புதிய சைவப் புலவர்களுக்கு வேண்டுகோள்

## முதுபெரும் சைவப்புலவர் கௌரவிக்கப்பட்டார்

''திருமுறைகள், சித்தாந்த நூல்கள் மற்றும் சைவசமய நூல்களை நன்கு கற்றுத் தேறிய நீங்கள்
''சைவசமயம் சிவசம்பந்தமுடையது சிவனையே முழுமுதலாகப் பேசுவது. சிவனை மறந்து செய்யப்படும்
செயல்யாவும் மறம் — வீண் செயல்'' என்பதை மறவாது நீங்கள் தொண்டாற்றும் சமூகத்திலே நும் பணி
களை ஆற்ற வேண்டும் சமூகத்தில் மக்களிடையே தோன்றும் சைவசமய கருத்து வேறுபாடுகளுக்கும் சந்தே
கங்களுக்கும் விடைகாண மக்கள் உங்களை அணுகும்போது நீங்கள் சைவமரபின்வழி மாறாது திருமுறை
களுக்கும் சித்தாந்த சாஸ்திரங்களுக்கும் மாறுபடாது உங்கள் கருத்தினை அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்த
வேண்டும். சைவப்புலவர்களாகிய நாம் எமது நடை உடை பாவனை என்பவற்றினாலும் என்றும் சைவச்
சான்றோர்களாக வாழ வேண்டும்''

(14ம் பக்கம் பார்க்க)

உ

### நல்லை வடிவேலர் வீதி வந்தார்

மங்கள நல்லை வடிவேலர் வீதிவந் தார்மடவார்
பங்கயங் காந்தன் குவளைவெண் முல்லை பரப்பிமறு
கெங்கு நிறைகுடம் வைத்து மெய்த்தொண்டு செய்தார் இதற்கோ
அங்க முழுதும் புனிதமி னார்க்கென் றறைந்ததுவே.

— சுன்னாகம் முத்துக்குமாரகவிராசர்

நல்லூர்த் தேர்த்திருவிழா: 17-08-2001 வெள்ளிக்கிழமை

உ

# ஆறுமுகநாவலர் முதல் பண்டிதமணி வரை சைவம் வளர்த்த சான்றோர்கள்:

# சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார்

(புத்தகம் 112, இதழ் 03 இன் தொடர்ச்சி)

யாழ் மத்திய கல்லூரிப்படிப்பும், அங்கு பேர்சிவல் பாதிரியாரோடு ஏற்பட்ட தொடர்பும், பாதிரிமார் களின் மதமாற்ற நடவடிக்கைகளும் எவ்வாறு ஒரு நாவலரை யாழ். மண்ணில் உருவாக்கியதோ, அதே போன்றதொரு சூழ்நிலையே சிவபாத சுந்தரனாரின் வாழ்க்கையிலும் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திற்று.

இந்தியாவில் கல்வி கற்று B. A. பட்டதாரியாகி யாழ்ப்பாணம் திரும்பிய சிவபாதசுந்தரனாருக்கு, தாமோர் நியாய துரந்தரராக வரவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அக்காலத்தில் நியாயதுரந்தரராக வர இலத்தீன் மொழியறிவு தேவை. கத்தோலிக் கரது சமய மொழியும் இலத்தீன். ஆகவே கத்தோலிக்கப் பாடசாலையொன்றில் இலத்தீன் மொழித் தேர்ச்சி பெறலாம் எனக்கருதித் திருகோணமலை சென். யோசப் கல்லூரியில் தலைமையாசிரியராகச் சேர்ந்தார். இவருடைய தலைமையின் கீழ் அப்பாடசாலை நல்ல செல்வாக்கோடு திகழ்ந்தமையால் இவரே அப்பதவியைத் தொடர்ந்தும் வகிக்க வேண்டுமெனக் கத்தோலிக்க குருமார் விரும்பினர். அதனால் பாதிரிமாரோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்களுடைய மதமாற்ற நடவடிக்கைகளும் யுக்திகளும் பிள்ளையவர்களின் மனதை வருத்தியது. அதற்காக அவர் குருமாரிடத்தில் எள்ளளவு வெறுப்பையும் காட்டியது கிடையாது. வெறுப்புற்றதும் கிடையாது. பதிலாக, ஒரு விடயத்தை மனங்கொள்ள வைத்தது. தாம் சைவசமயத்தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை வேரூன்றச் செய்தது. அவருக்கு முப்பது வயதாகும் போதே இத்தொண்டில் வாழ்நாளைக்கழிக்க முடிவு செய்து விட்டார்.

வாழ்வில் ஒரு குறிக்கோளையே இலக்காக வைத்துக்கொண்டு அதற்காக முயற்சிக்க வேண்டுமென்று பிள்ளையவர்கள் தீர்மானமெடுத்தார். அவ்வாறு தீர்மானமெடுக்க வைத்ததற்கு கத்தோலிக்க குருவுக்கும் பிள்ளையவர்களுக்கும் இடையே நடந்த பின்வரும் சம்பாஷனை தான் காரணமெனப்பிள்ளையவர்களே கூறியுள்ளார். சம்பாஷனை இதுதான்:

பிள்ளையவர் கள்:

ஒருவன் சரி என்று அறிந்த படி ஒழுகுவான்.

கத்தோலிக்க குரு:

அறிந்திருக்கலாம். ஆனால் அதன் படி ஒழுகுவது மிகவும் அருமை.

பிள்ளையவர்கள்:

ஒழுகவில்லை என்பது அவன் அறியவில்லை என்பதைக் குறிக்கின்றது.

இச்சம்பாஷனையிலிருந்து பிள்ளையவர்கள் தர்க்கசாஸ்திரம் கற்றவர் என்பதைத் தெளிவாகக்காணலாம். அவருடைய இந்தப்பதில் தான் அவருடைய வாழ்வைத் திசை திருப்பி - வாழ்வின் அச்சாணியாகியது.

தான் மெய்யென்று எதனை அறிந்தாரோ அதன்படியே வாழ்நாள் முழுவதும் ஒழுகினார். அவருடைய மனதிற் குடிகொண்டது ஒரு சைவனாவது யாழ்ப்பாணத்தில் இருந்து விட்டால் அதுவே போதுமானது என்ற ஒரேயொரு ஆசையாகும். யாழ்ப்பாணத்தில் அந்த ஒரு சைவன் ஏன் நானாக அமையக்கூடாது என்று தம்மைத்தாமே சிவசோதனைக்கு ஆளாக்கத் தீர்மானித்தார். கத்தோலிக்க பாடசாலை வாழ்வை 1904 ஆம் ஆண்டில் கைவிட்டு யாழ்ப்பாணம் திரும்பினார். யாழ்ப்பாணம் வந்த பிள்ளையவர்கள், மதமாற்றத்தின் நிலைக்களனாகத் திகழ்ந்த யாழ்ப்பாணக்கல்லூரிக்குச் சைவப் பிள்ளைகள் செல்வதைத் தவிர்க்கும் நோக்கோடு உதயமான விக்ரோறியாக்கல்லூரியில் துணை அதிபராகச் சேர்ந்தார்.

(அடுத்த இதழில் தொடரும்)

## பட்டமளிப்பும் பரிசளிப்பு விழாவும்

சைவபரிபாலன சபையாரால் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வு — 2000 இல் தேறிப் பரிசு பெற்றோர்களுக்கான பரிசளிப்பும் சைவசித்தாந்த பிரவேச பாலபண்டிதர் தேர்வு — 2000 இல் தேறியவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் சபையாரின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 10-06-2001 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சபைத்தலைவர் திரு. இ. மகேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டங்களையும் பரிசில்களையும் வழங்கினார். தேவார இசைமணி கே. எஸ். ஆர். திருஞானசம்பந்தன் ஓதுவார் அவர்களின் பண்ணிசைக் கச்சேரியும் இந்துசாதனம் ஆசிரியர் பேராசிரியர் இ. குமாரவடிவேல் அவர்களின் ''கல்வியின் நோக்கம்'' என்னும் பொருளிலான சொற்பொழிவும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன.

உ

# சைவபூஷணம் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள்

## அவரது வாழ்க்கை சிவப்பணியாளர்களுக்கோர் முன்மாதிரி

ஒரு மெல்லிய உருவம், வெள்ளை வேட்டி - வெள்ளை மேலங்கி அல்லது உத்தரீயப் போர்வை - நெற்றி நிறைந்த விபூதி - சந்தண குங்குமப் பொட்டுக்களுடன் சாந்தம் நிறைந்த முகம்.

சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரைப் புகைப்படத்தில் பார்த்தவர்கள் இவரது தோற்றம் அவரை ஒத்திருப்பதைக் காண்பார்கள். இத் தோற்றப்பொலிவைக் கொண்ட அந்த உருவம் மிதிவண்டியொன்றில் காலை ஏழு மணிக்கு முன் தனது யாழ்ப்பாணம் அரசடி வீதியிலுள்ள இல்லத்திலிருந்து புறப்படுகிறது. மத்தியான உணவு வேளையில் இரு மணி நேர ஓய்வு தவிர்ந்த மற்றைய வேளையெல்லாம் இரவு ஏழு மணி வரை மிதிவண்டியில் ஒடித்திரிந்து பல கருமங்கள் பார்க்கிறது.

அக்கருமங்களில் தொண்ணூற்றொன்பது சதவீதமானவை சைவ சமய வளர்ச்சி கருதியவை.

வீட்டில் தங்கியிருக்கும் இரவு வேளையும் அதிகாலைப்பொழுதுங் கூட பிரார்த்தனை, சமய நூல்கள் சஞ்சிகைகள் படித்தல், சமய வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிடல் போன்றவற்றிற்குத் தான் ஒதுக்கப்பட்டிருக்கும். இந்த உருவத்துக்குரியவர்தான் சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள்.

சைவப்புலவருடன் நெருங்கிப் பழகுபவர்களுக்குக் கூட அவர் ஆற்றும் பல்வேறுபட்ட பணிகள் பற்றியும் அவரது வாழ்க்கை வரலாறு பற்றியும் அதிகம் தெரியாது.

பெயருக்கும் புகழுக்காகவும் அன்றி தொண்டு மனப்பான்மையுடன் கருமங்கள் ஆற்றுவதால், அவர் தாம் ஈடுபட்டிருக்கும் பணிகள் பற்றித் தேவைக்கதிகமாக எவருக்கும் கூறிக்காட்டுவதில்லை.

அதனால் அவரது தொண்டுகள் இலை மறைகாயாகவே இருந்து வருகிறது. எழுபது வயதைப் பூர்த்தி செய்து விட்ட அன்னாரது தன்னலமற்ற - அர்ப்பணிப்பு மிக்க - சேவைகளை சைவ உலகம் அறிந்து கொள்வது நல்லது.

சைவப்புலவரது சேவைகளைப் பாராட்டி அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினர் அன்னாருக்கு ''சைவ பூஷணம்'' பட்டமளித்துக் கௌரவித்திருக்கும் இச்சமயத்தில், அவரது வாழ்க்கை வரலாற்றையும் தொண்டுகளையும் எழுத்தில் பதிப்பது நன்றெனக்கருதுகிறோம்.

### இளமைக்கல்வி:

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் ஆசிரியப் பணியிலிருந்து இளைப்பாறிய பின் ஆச்சிரமமமைத்து இருபத்தைந்து வருடகாலம் தவசிரேட்டராக வாழ்ந்த பூமி வல்வெட்டித்துறைக்குச் சமீபத்திலுள்ள பொலிகண்டி என்ற கிராமம். அங்கு கந்தவனக்கடவையில் அமைந்த கந்தப்பெருமான் கோவில் பிரசித்தமானது. கந்தவனக்கடவைக் கோவில் வீதியில் தான் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் ஓலைக் கொட்டில் குடிசை அமைத்து வாழ்ந்தார்.

இத்தகு சிறப்புப்பெற்ற கந்தவனக்கடவையிலே 1931 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதினெட்டாம் திகதி (சைவப்பெரியார் பிறந்த தினம் 1878 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதினேழாம் திகதி. திகதி, மாதத்தில் கூட ஒரு நெருக்கம்) வல்லிபுரம் வள்ளியம்மை தம்பதியினருக்குப் புத்திரனாகப் பிறந்தார்.

தனது ஆரம்பக்கல்வியைக் கரணவாய் வடக்கு சைவ வித்தியாசாலையிற் பெற்றுக்கொண்ட இவருக்கு சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் கந்தவனக்கடவையில் ஆச்சிரமம் அமைத்திருந்தது பெருவாய்ப்பாக அமைந்தது.

சைவப்பெரியார் இவரைச் சைவ உணர்வுமிக்க ஒருவராக உருவெடுக்க வைத்தார் எனக்கூறலாம். இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தொடர்ந்த போது, இவரது சைவாபிமானம் மேலும் மெருகு பெற்றது.

அக்காலத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராக வித்துவான். ந. சுப்பையாபிள்ளையும் உப அதிபராக வை. ஆத்மநாதசர்மாவும் கடமையாற்றினார்கள்: 1953 முதல் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சைவத் தமிழ் உயர் நிலைக் கல்வி நடைபெற்றது. அக் கல்வியின் போதனாசிரியர்களாக வித்துவான் ந. சுப்பையாபிள்ளை தலைமையில் வித்துவான் கார்த்திகேசு, வித்துவான் வேந்தனார், வித்துவான் க. கி. நடராஜன், பண்டிதர் மு. இரத்தினேஸ்வரஐயர் ஆகியோர் கற்பித்தார்கள். அவர்களிடம் இலக்கிய, சமய நூல்களைக் கற்கும் வாய்ப்பு திரு. கந்தசாமி அவர்களுக்குக் கிடைத்தது.

நாவலர் பெருமான் மீது பெருமதிப்பும் பக்தியும் ஏற்பட நாவலர் பாடசாலைத் தொடர்புகள் வழிவகுத்தன.

### ஆசிரியப்பணி:

திரு. கந்தசாமி அவர்களின் சமய அறிவையும் சமயவுணர்வையும் தமிழ்ப்புலமையையும் நேரில் கண்டு கொண்ட அவர் கல்வி பயின்ற வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை (இன்றைய நாவலர் மகாவித்தியாலயம்) முகாமையாளர் திரு. வி முத்துக்குமாரு அவரை 02-02-1953 ஆம் திகதி அப் பாடசாலையிலேயே ஆசிரியப் பணியில் அமர்த்தினார்கள்.

நாவலர் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் போது அங்கு நடைபெற்று வந்த காவிய பாடசாலையிலே பயின்று 1958 ஆம் ஆண்டு சித்தாந்த பண்டிதர் தேர்விலும் 1960 ஆம் ஆண்டு சைவப்புலவர் தேர்விலும் சித்தியடைந்தார். நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிற் பயின்று 1960 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட ஆசிரியரானார். 1980 ஆம் ஆண்டு கல்வித்திணைக்களத்தினால் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் விசேட சமயப் பயிற்சியும் பெற்றுக் கொண்டார்.

1961 ஆம் ஆண்டு பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து வண்ணை நாவலர் பாடசாலையிலிருந்து 1967 ஆம் ஆண்டு

(4 ம் பக்கம் பார்க்க)

# சைவபூஷணம் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இடமாற்றம் பெற்ற திரு. கந்தசாமி அவர்கள் ஏழாண்டுகள் வெளிமாவட்டங்களில் சேவையாற்றினார். ஜனவரி 1967 முதல் மூன்றாண்டுகள் ஹொறவப்பொத்தானை மகா வித்தியாலயத்திலும் ஜனவரி 1970 முதல் நான் காண்டுகள் மிகுந்தலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும் ஆசிரியராகக் கடமையாற்றி தரம் 10, 11 க்கு சமயம், தமிழ் கற்பித்தார் 1974 ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணம் பெரியபுல மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று அங்கு உதவி ஆசிரியராகக் கற்பித்து உப அதிபராகவும் பதவியுயர்த்தப்பட்டு தரம் 13 க்கு இந்துநாகரிகமும் கற்பித்தார். 17-01-1991 ஆம் திகதி அறுபது வயதில் ஓய்வு பெறும் வரை பெரியபுலம் மகா வித்தியாலயத்திலேயே துணை அதிபராகக் கடமையாற்றினார்.

இவரிடம் கல்வி கற்றவர்கள் சமய உணர்வும் தமிழ் இலக்கண அறிவும் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். தாம் ஆசிரியப் பணியாற்றிய பாடசாலைகளிலெல்லாம் சமய குரவர் குருபூசைகள், சமய விழாக்கள் ஆகியன சிறப்பாக நடைபெறக் காரணமாகவிருந்தார்.

## ஆலயங்கள் ஊடான சமயப்பணி:

நாவலர் பாடசாலையில் கல்வி கற்க ஆரம்பித்த காலத்திலேயே திரு. கந்தசாமி அவர்கள் அப்பாடசாலைக்கு முன்னே கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள சாந்தையர் மடம் கற்பக விநாயகரைச் சிக்கெனப் பற்றிக் கொண்டார். மாறாத பக்தியுடன் ஆலய வழிபாட்டிலும் தொண்டிலும் ஈடுபட ஆரம்பித்த சைவப்புலவர் அவர்கள் தாம் ஆசிரியப் பணியாற்றவாரம்பித்த 1953 ஆம் ஆண்டு முதலே — இருபத்தியிரண்டு வயதிலேயே — சாந்தையர் மட ஆலயத்தில் வார இறுதி சமய வகுப்புக்களை நடத்தத் தொடங்கி விட்டார்.

ஆலயத்துடன் இணைந்ததொரு அமைப்பாகச் சைவசமய அபிவிருத்திக் கழகம் ஒன்றை 1954 இல் உருவாக்கி, அதில் அவ்வாலய சுற்றாடலில் உள்ள பல்வேறு வயதினரையும் தரத்தினரையும் ஈடுபடச் செய்து இளஞ்சிறார்களுக்கு தொண்டு செய் பயிற்சிகள் அளித்து, நூல் நிலையம் நடத்தி, பரீட்சைகள், போட்டிகள் வைத்து சமய, கலாசார விடயங்களில் இளைஞரை ஊக்குவித்து — அவர்களுக்கு பெரியார்களைக் கொண்டு பரிசில்கள் வழங்குவித்து — செயற்றிறன் மிக்கதோர் அமைப்பாகக் கழகத்தை வளர்த்தெடுத்தார்.

1954 ஆம் ஆண்டு முதல் இக்கழகத்தின் தலைவராக, செயலாளராக, பரீட்சைச் செயலாளராக பல்வேறு பதவி நிலைகளை வகித்தபோதும் சரி வகிக்காதபோதும் சரி கழகத்தின் உயிர்நாடியாக சைவப்புலவர் அவர்களே செயற்பட்டு வருகிறார்.

ஆலய தர்மபரிபாலன சபையின் செயலாளராகவும் 1954 ஆம் ஆண்டு முதற் செயற்பட்டு வருகிறார். அவ்வாலய சுற்றாடலில் வேறு பல பெரிய ஆலயங்கள் இருந்தபோதிலும், சமய வளர்ச்சி மையமாக சாந்தையர் மட ஆலயம் கடந்த நாலு தசாப்தங்களாக விளங்கி வருவதற்குக் காரணமானவர் சைவப்புலவர் அவர்கள்.

ஆலயத்தைப் புனரமைத்து மூன்று தடவைகள் கும்பாபிடேகங்கள் நிகழவைத்தும் சிவாகம விதி வழுவாது பூசைகளை நடப்பித்தும், திருமுறை பாராயணம், புராணபடனங்களை ஊக்குவித்தும் வருகிறார். இவ்வாலயத்தில் தம்முடன் பல பௌராணிகர்களையும் பங்கு பற்ற வைத்து 1974 ஆம் ஆண்டு முதல் - இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக - ஆண்டு தோறும் கந்தபுராண படனம் நிகழ்த்துவித்து வருகிறார். இவ்வாலயப் பணிகளில் பிரம்மஸ்ரீ சீதாராமசாஸ்திரிகள் போன்ற பெருமக்களை ஈடுபடவைத்த பெருமையும் இவரைச் சாரும்.

வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள மற்றொரு விநாயகராலயமான பன்றிக்கோட்டு விநாயகராலய நிர்வாகத்தையும் சீர்படுத்தி 1972 முதல் பல வருடகாலம் அதன் நிர்வாகசபைச் செயலாளராகப் பணி புரிந்துள்ளார்.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் நிர்வாகத்தைப் பரிபாலன சபையொன்று கையேற்று நடத்த வேண்டியதொரு நிலை ஏற்பட்ட போது அப்பரிபாலன சபையின் தலைவராகப் பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். 1991 பங்குனி முதல் 1993 நவம்பர் வரை இவ்வாலய பரிபாலனம் இவரது தலைமையில் கீழமைந்த ஒரு பரிபாலன சபையினரால் நடத்தப்பட்டது.

யாழ் வில்லூன்றி புனித தீர்த்த பரிபாலனசபையின் நிர்வாகசபை உறுப்பினராக 1991 ஆம் ஆண்டு முதலும் பொருளாளராக சிறிது காலமும் கடமையாற்றி அதன் அபிவிருத்திக்கு உழைத்தார்.

1967 - 70 களில் ஹொறவப் பொத்தானையில் ஆசிரியராகக் கடமையாற்றியபோது பழமை வாய்ந்த வன்னித் திருக்கோவிலான வவனிக்குளம் சிவாலயப் புனரமைப்பு, கலைவிழா, விசேட மலர் வெளியீடு போன்ற பணிகளில் பெரும்பங்கு வகித்தார்.

## சைவபரிபாலனசபை ஊடான பணிகள்:

1953 ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் அங்கத்தவராகச் சேர்ந்து கொண்ட சைவப்புலவர் அவர்கள், துடிப்புள்ள இளந்தொண்டராக சபை நடவடிக்கைகளில் பங்கு பற்றினார். அக்காலகட்டத்தில் ஏறத்தாழ மூன்று தசாப்தங்கள் வரை சபையின் சமயப்பிரசார அமைச்சராகவிருந்து அருந்தொண்டாற்றிய திரு. மு. மயில்வாகனம் அவர்களுக்கு உறுதுணையாகவிருந்து சைவ மாநாடுகள், குருபூசைகள், புராண படனங்கள், சைவசமய தீட்சை நிகழ்வுகள் ஆகியன சபை நாவலர் மண்டபத்தில் சிறப்புடன் நடைபெறப் பணியாற்றினார்.

சைவ பரிபாலன சபையினரால் பல தசாப்தங்களாக யாழ்ப்பாணச் சிறைச்சாலை, கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலை ஆகியவற்றில் சிறைவைக்கப்பட்டிருந்த கைதிகளுக்கு ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் ஒழுக்கமும், சமயமும் போதிக்கப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டு வந்தது. சைவப்பிரகாசர் திரு. பொன் அப்புக்குட்டி, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை போன்ற பல பெரியார்கள் இதிற் பங்குபற்றியமையை இந்து சாதனப் பழைய ஏடுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

இப்பணியை சைவப்புலவர் அவர்கள் 1968 ஆம் ஆண்டு பொறுப்பேற்று 1986 ஆம் ஆண்டு வரை திறம்பட ஆற்றி வந்தார். 1967 ஆம் ஆண்டு முதல் 1973 ஆம் ஆண்டு வரை யாழ் குடாநாட்டுக்கு வெளியே ஆசிரியர் பணி ஆற்றிய காலங்களில்

(13 ம் பக்கம் பார்க்க)

உ

# சைவபரிபாலன சபை
## தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் - 11

(புத்தகம் 112, இதழ் 3 இன் தொடர்ச்சி)

சபை தொடங்கிய முதலாவது ஆண்டில் பிரசங்கங்கள் மாத்திரம் நடந்து வந்தது. இரண்டாவது ஆண்டில் பிரசங்கத்தோடு இந்துசாதனம் பத்திரிகையும் ஆரம்பித்து நடத்தப்பட்டது. மூன்றாவது ஆண்டிலே பிரசங்கம், பத்திரிகை என்பவற்றோடு இந்து உயர்நிலைப் பாடசாலை என்ற கல்விச்சாலையும் தொடங்கலாயிற்று.

இந்து உயர்நிலைப் பாடசாலை தொடங்கும்போது, அதன் முதாாவது தலைமையாசிரியராக நியமனம் பெற்றவர் திரு. ச அப்பாபிள்ளை ஆவர். இவர் அதுவரை காலமும் திரு. நாகலிங்கபிள்ளையின் சுதேசிய பட்டண உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராகக் கடமையாற்றியவர். பாடசாலை ஆரம்பித்தபோது மாணவர்களின் எண்ணிக்கை எண்பதாக இருந்தது.

இது இவ்வாறாக, நாம் முன்னர் இந்து சாதனம் புத்தகம் 11 இதழ் 12 இல் குறிப்பிட்டிருந்தபடி, காக் (Kock) ஆங்கில பாடசாலை பறங்கித்தெரு சப்பல் வீதியில் நடைபெற்று வந்தது. இப்பாடசாலை சைவாசார முறைக்குப் பங்கமில்லாது நடத்தப்பட்டதால், அங்கு கல்விகற்றவர்களில் அநேகர் வண்ணார்பண்ணை, நல்லூர் பகுதிகளைச் சேர்ந்த சைவப்பிள்ளைகளாக இருந்தனர். அங்கு ஆசிரியர்களாக இருந்தவர்களும் அநேகர் சைவர்களே. அதனால் இப்பாடசாலையும் 1889 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் முன்னர் சேணியதெரு எனவும் இப்போ மணிக்கூட்டு வீதி, என அழைக்கப்படுவதுமான வீதியில் உள்ள ஒரு வீட்டுக்கு மாற்றப்பட்டு அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்து உயர்நிலைப்பாடசாலை தொடங்கியவுடன் காக் பாடசாலையில் படித்த பிள்ளைகள் எல்லோரும் இப்பாடசாலைக்கு வரலாயினர். அதனாலே அங்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் சபையார் தமது இந்து உயர்நிலைப்பாடசாலை ஆசிரியர்களாக உள்வாங்கிக் கொண்டனர். அவ்வாறு உள்வாங்கப்பட்டவர்கள் இ. அருளம்பலம், மா சபாபதி, ச. பொன்னுத்துரை, நா. பொன்னையா, சி. காசிப்பிள்ளை ஆகியோராவர். இவர்களின் நியமனத்துடன் பிள்ளைகள் தொகை படிப்படியாக அதிகரித்து 1890 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மாணவர் தொகை 130 ஆகிற்று.

### பாடசாலைக்காணி - சாதனம் எழுதப்பட்டது.

திரு மாரிமுத்துப்பிள்ளை உபாத்தியாயர் ஏலத்தில் வாங்கிய "தச்ச வளவும் மயிலன் வளவும்" என்ற ஆறேகாலே அரைக்கால் பரப்புக் காணியையும் அதற்கு கிழக்கு எல்லையிலுள்ள ஒன்றேகால் பரப்புக் காணியையும் உறுதிகளில் பிசகில்லை எனின் வாங்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டமை பற்றியும் பசுபதிச்செட்டியார் அவர்களால் விசாலமான தற்காலிக கட்டடம் அமைக்கப்பட்டு விஜயதசமி தினத்தன்று பாடபோதனைகள் ஆரம்பிக்கப்பட்டமை பற்றியும் முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

பாடசாலை அமைந்த இக்காணிகளுக்கான உறுதி சாதனங்கள் 1890 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்தாம் திகதி முடிக்கப்பட்டன. முதற்குறிப்பிட்ட காணி சைவபரிபாலனசபையின் செயலாளர் திரு. வி. காசிப்பிள்ளை பெயரிலும் இரண்டாவதாகக் குறிப்பிட்ட காணி சபையின் பொருளாளர் திரு. சித. மு. பசுபதிச்செட்டியார் அவர்கள் பெயரிலுமாகச்சாதனங்கள் முடிக்கப்பட்டன.

பாடசாலையில் இலக்கண இலக்கியங்களோடு சமயவுணர்ச்சிக்கடுத்த நூல்களைக் கற்பித்தற்கு இரு தமிழ்ப் பண்டிதர்கள் நியமிக்கப்பட்டார்கள் அச்சமயம் யாழ்ப்பாணத்தில் இருந்த வேறெந்தப் பாடசாலையையும் விடக்குறைந்தளவு கட்டணமே இப்பாடசாலையில் அறவிடப்பட்டது.

### விடுதி வசதி:

இப்பாடசாலையில் கற்ற மாணவர்களுக்கு பாடசாலையின் பக்கத்திலே 1891 ஆம் ஆண்டில் விடுதிச்சாலையொன்றும் அமைத்து நடத்தப்பட்டது. இங்கு தங்கிக் கல்வி கற்ற மாணவர்களிடம் மூன்று விதமான கட்டணம் அறவிடப்பட்டது. சிறுவர்களிடம் மூன்று வேளை உணவுக்காக நாளொன்றுக்கு பன்னிரண்டரைச் சதமும் நடுத்தரவயது மாணவர்களிடம் பதினாறு சதமும் வளர்ந்த மாணவர்களிடம் இருபது சதமும் பெறப்பட்டது. இம்மாணவர்களுக்கு இரவில் இரண்டரை மணிநேரமும் காலையில் இரண்டரை மணி நேரமும் பாடம் சொல்லிக் கொடுக்க நான்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இதற்காக மாணவர்களிடம் மேலதிக பணம் பெறப்படவில்லை. இவ்விடுதியிலே தங்கியிருந்து கல்விகற்றவர்களுள் வட்டுக்கோட்டை திரு. எஸ் வைத்தியலிங்கம், மட்டக்களப்பு மாவட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய வைத்திய கலாநிதி சி. சிவசிதம்பரம், நியாயவாதி வி. எம். சரவணமுத்து, எம். எஸ். முருகேசு, அவரது சகோதரர் நியாயவாதி எம். எஸ். இளையதம்பி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

### கல்வித் திட்டம்:

இப்பாடசாலையின் முன்னோடிகள் ஒற்றுமையாக அர்ப்பணிப்புடனும் ஒரு நோக்குடையவர்களாகவும் செயற்பட்டார்கள். அவர்கள் பெயருக்காகவோ புகழுக்காகவோ எதையும் செய்யாது சைவ சமூகத்தின் கல்வி வளர்ச்சி யொன்றையே நோக்காகக் கொண்டு அயராது உழைத்தார்கள்.

இக்கல்விக் கூடத்தில் அக்காலத் தேவைக்கேற்றதும் மாணவர்களுக்கு நீண்டகால அனுகூலங்களைத் தரக்கூடியதுமான கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சமயக்கல்வி வலியுறுத்தப்பட்டது தினமும் பாடசாலை ஆரம்பமாகும் போதும் முடிவடையும் போதும் தேவாரம் ஓதப்பட்டது. மாணவர்கள் சைவ உணவாளர்களாக இருக்கத் தூண்டப்பட்டார்கள். அதே வேளை, பாடவிதானத்தின் பிரதான பகுதி பொதுப்பாடசாலை மாதிரியைப் போன்றதாக வடிவமைக்கப்பட்டது இது இப்பாடசாலை மிஷனரிமார்களின் பாடசாலைகளான யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி போன்றவற்றிற்கு இணையாகத் தன் சொந்தக் காலிலேயே நிற்கக் கூடியதாக இருக்க வேண்டுமென்ற குறிக்கோளுக்கு அமைவாக இருந்தது.

(12ம் பக்கம் பார்க்க)

உ

# அரனார்க்கு ஆறுமுகன் செய்த உபதேசம்

— G. M. முத்துசாமிபிள்ளை —

['பரமனது இருசெவி களிகூர உரைசெயும் ஒருமொழி பிரணவ முடிவு'தான் என்பதைத் திருப்புகழ் நெறிநின்றும், கந்தபுராண நெறிநின்றும் தெளிவுறுத்துகிறது இக் கட்டுரை]

திருவருள் பெற விரும்புவோர்கள் மேற்கொள்ளத்தக்க முறை இன்னது என்பதை அறிந்து கொள்ளப் பலரும் விரும்புவது இயல்பேயாகும். ஆனால், இம்முறை கடினமாக இருக்குமானால், அதைப் பின்பற்றுவோர் எண்ணிக்கை மிகச் சிறிதாக ஏற்பட்டுவிடும் ஆதலால், எல்லாருமே மிகச்சுலபமாகப் பின்பற்றக்கூடியதான ஒரு முறை தேவை. இத்தகையதொரு முறை நிலை பெறுமானால் மாத்திரமே மக்கள் பலரும் உய்வழியறிந்துகொள்ள இயலும். மேலும் இத்தகைய முறையும் எல்லாருக்கும் கைவரப்பெற வேண்டும். இதற்காகச் சிவபெருமான், தம்மிலும் வேறல்லாதவராகிய முருகப்பெருமானைக்கொண்டு தாம் உபதேசம் செய்துகொண்டார். இதனால், இவ்வுபதேசம் சிவபெருமானுக்குத் தேவையென்பதாகவோ, இவ்வுபதேசம் சிவபெருமானுக்குத் தெரியவில்லை என்பதாகவோ கொள்ளக்கூடாது. சிவபெருமான் தம்செவி வழியாக முருகப்பெருமான் செய்த உபதேசத்தைப்பெற்றபோது, உலகினில் உள்ள எல்லாருமே அவ்வுபதேசத்தின் பயனைப்பெறுகிறார்கள். ஏனெனில், அப்பெருமான் எல்லா உயிர்களுக்கும் உயிருக்கு உயிராய் இருப்பவர். இதை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம்; பிட்டுக்கு மண் சுமக்கும் கூலியாள் வடிவில் சிவபெருமான் வந்தபோது, பாண்டிய மன்னன் தன் அறியாமை காரணமாக சிவபெருமான் முதுகில் அடித்த அடி எல்லார் மீதும் பட்டது என்பதைப் பரஞ்சோதி முனிவர்,

''பாண்டியன் முதுகிற்பட்டது செழியன்
பன்னியருடலிற்பட்டது
ஆண்டகை அமைச்சர்மேனிமேற்
பட்டதரசிளங்
குமரர் மேற்பட்டது
ஈண்டிய கழற்காலவீரர் மேற்பட்ட
தீவுளி
மேற்பட்டது பருவம்
பூண்ட வெங்கரி மேற்பட்ட தெவ்
வுயிர்க்கும்
போதன் மேற்பட்டவத்தழும்பு''

என்பதாகக் காட்டுகின்றார்.

## உபதேச நிலை:

இத்தகைய உபதேசம் எவ்வாறு செய்யப்பெற்றது என்பதை ஆன்றோர்கள் கூறியவற்றிலிருந்து இனிக் காண்போம். சிவபெருமான் ஒருவரே ஒப்பற்ற ஞானகுரு. பற்பல சமயங்களில் பற்பலருக்கு உபதேசம் செய்துள்ளார். இமையோருக்குச் சிவபெருமான் வேதத்தைத் திருவோத்தூரில் உபதேசித்தார் என்பதை,

''இத்தகைய மாமறைநூல் முன்னா
ளித்
திருக்காஞ்சி வரைப்பினிற்
றென்சார்
தத்துநீர் அலைபுரட்டுஞ் சேயாற்றின்
தடங்கரைக்
கண் இமையோர்கட்கும்
மெய்த்தவர்க்கும் ஓதுவித்தோம்''

எனவரும் காஞ்சிப்புராணச் செய்யுள் விளக்குகிறது. மேலும்,

''மையுலா வரு களத்தினன் அளப்
பிலா மறைகள்
பற்பல புரிந்ததிற் சிலயான் உய்யு
மாறு அருள்
செய்தனன் அவை உணர்ந்துடை
யேன்''

எனப் பிரமதேவன் கூறுவதாகக் கந்தபுராணம் நமக்கு அறிவிப்பதால், பிரமதேவன் சிவபிரானிடமிருந்து வேத உபதேசம் பெற்றவன் எனக் கொள்ளவேண்டும். ஆயினும், உட்பொருளாகிய பிரணவ மந்திரத்தின் உண்மையைப் பிரமதேவன் அறியவில்லை என முருகப்பெருமான் கண்டார். மெய்ப்பொருளை உணராத பிரமதேவன் படைப்பன உய்ய வழியில்லை. என்பதாக முருகப்பெருமான் தாமே படைப்புத்தொழிலை மேற்கொள்ளுகிறார். இதனை உணர்ந்த சிவபெருமான் பிரணவ மந்திரத்தின் மெய்ப்பொருளைத் தம் குமரனிடமிருந்தே பெறுகிறார்.

உபதேசம் பெறுபவர் கிழக்கு நோக்கி இருக்க வேண்டும். உபதேசம் செய்பவர் வடக்கு நோக்கி இருக்க வேண்டும்; ஏனெனில், அப்போது தான் வலச்செவியில் உபதேசம் செய்ய இயலும். உபதேசம் செய்பவர் உயர்ந்த பீடத்தில் இருப்பார். உபதேசம் செய்யப்பெறுபவர் தாழ்ந்து இருக்க வேண்டும் என்ற நீதியைக் காட்டுவார் போல், சிவபெருமான் நிலைகொண்டார்.

''அரியணை மீதில் தன்மகவான
அறுமுகன்
தனையினி திருத்திப்
பரசிவன் தாழ்ந்து வலச்செவி
கொடுப்பப்
பரிந்துப தேசமே புரிந்தான்''

என்பதைத் தணிகாசல புராணம் கூறுகிறது.

முருகப்பெருமான் உபதேசம் செய்தது சிவபெருமான் வலக்காதில் என்பதை

''தெக்ஷிண செவிதனிலே
போதனை யருள் குருநாதா''

என்னும் திருப்புகழ் வாக்கு நமக்கு விளக்குகிறது. இவ்வாறு முருகப்பெருமான் உபதேசம் செய்தபோது சிவபெருமானுக்கு மனம் குளிர்ந்தது என அருணகிரியார் காட்டுகிறார்.

''பரமன திருசெவி களிகூர
உரை செயுமொரு மொழி
பிரணவ முடிவு''

— திருப்புகழ் - 170.

''சிவனார் மனங்குளிர உபதேச
மந்த்ரமிரு
செவி மீதிலும் பகர்செய் குருநாத''

— திருப்புகழ் - 109.

''இரு செவி'' என்னும் தொடர் இரண்டு செவிகள் என்னும் பொருளைத் தருவதில்லை. இரு செவி என்

(11ம் பக்கம் பார்க்க)

உ

# அனைத்தும் சிவபரம்பொருள்

— குமாரசாமி சோமசுந்தரம் —

சிவம் பரம்பொருள்; எங்கும் நிறை பொருள்; மனம், வாக்கு, காயத்தினால் அறியமுடியாத மெய்ப் பொருள்.

விநாயகன், பரம்பொருளின் மூர்த்தம். ஓம் எனும் பிரணவ ஒலி வடிவானவன், விநாயகன். ஒலியே முதற் தோற்றம். முதலில் தோன்றிய அந்தப் பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் நமது முதல் வணக்கத்திற்கு உரியவன் ஆகின்றான். எக்கருமத்தை ஆற்றத் தொடங்குமுன்னும், எக்கிரியையை நிகழ்த்த ஆரம்பிக்க முன்பும், விநாயகரைத் தொழுது வணங்கிச் செய்தல் சைவமரபு ஆகிவிட்டது.

முருகன் பரம்பொருளின் மற்றொரு மூர்த்தம். ஒளியின் பிம்பமாக, ஞான ஒளிவடிவாக அமைகின்ற மூர்த்தம். இறைவன் ஒலியாகவும், ஒளியாகவும் வெளிப்பாடாகி, முறையே விநாயகன் ஆகவும், முருகன் ஆகவும் எமக்குக் காட்சி தருகின்றான். இது, இறைவன் நம்மீது கொண்டுள்ள அளப்பருங் கருணையாகும்.

எனவே, சிவபெருமான், விநாயகப்பெருமான், முருகப்பெருமான் ஆகிய மூவரும் வேறல்லர்; ஒருவரே ஆவர். சைவத்திற்கு ஒன்றே குலம்; அது மனித குலம்; ஒருவனே தேவன்; அந்த மகாதேவனே, சிவபெருமான்.

''யாதொரு தெய்வங் கொண்டீர்,
அத் தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம்
வருவர்''

என்கிறது சைவத்தின் சாத்திர நூல்.

சிவபெருமான் சக்தியாகிய உமாதேவியாரோடு இணைந்திருப்பவர். சிவமும் சக்தியும் இணைந்திருக்கும் தத்துவம் சிவசக்தி சங்கமம்.

''தன்னிலைமை மன்னுயிர்கள்
சாரத் தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்''

எனத் திருவருட்பயன், சக்தியின் வேறாகாத சிவமாம் தன்மையை எடுத்துக் காட்டுகிறது. எனவே தான் மாதொருபாகன், அம்பிகை பாகன், அர்த்தநாரீஸ்வரன் என்னும் திருப்பெயர்களால், சிவபெருமான் அழைக்கப்படுகிறான். மூலப் பொருளும் சக்தியும் இணையும் போதே ஒன்று உற்பத்தியாகின்றது; அல்லது படைக்கப்படுகின்றது என்பது இன்றைய விஞ்ஞான உண்மை. சிவம் ஆகிய முதல்; முழுமுதல்; மூலப்பொருள்; மூலமெய்ப் பொருளும் சக்தியும் சேர்ந்ததன் விளைவே இந்த உலகமும் அதில் காணப்படுகின்ற தநு, கரண, புவன போகங்களும் ஆகும். தனித்து மூலப் பொருளோ, சக்திப்பொருளோ, பிறிதொரு பொருளை ஆக்கிவிட முடியாது. இரண்டின் இணைப்பிலேயே பிறிதொரு பொருள் உருவாகமுடியும். சக்தி பின்னமிலான் எங்கள் சிவபிரான். எனவே, உலகத்தின் கருத்தா சிவபெருமான் என்னுங்கூற்று, எத்துணை விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கூற்று என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

சிவத்தை ஒலியாகக் கேட்டு உணர்ந்துகொள்ள முடியும் என்பதை ஓம் எனும் பிரணவ ஒலியும் அதன் விம்பமாகத் தோற்றமளிக்கும் ஆனைமுகனின் திருவடிவமும் உணர்த்துகின்றன. சிவத்தை ஒளியாக, சோதியாக, சுடராகக் கண்டு வழிபட முடியும் என்பதை அந்த ஒளியின், பேரொளியின் பேரெழில் விம்பமாகத் தோற்றமளிக்கும் ஆறுமுகனின் தோற்றம் உணர்த்துகின்றது.

ஆனைமுகன், ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன், ஞானகுரு, வாணி அனைத்துக் கடவுளரும் சிவ பரம்பொருளே, என்பதைச் சைவம் காட்டுகின்றது. சைவசமயம் மெய்ச் சமயம் என்பதற்கு வேறும் சான்றுகள் வேண்டுமோ! சைவம் ஒரு சமயம், தத்துவம், வாழ்க்கை நெறி என்ற வகையில், மூன்று கூறுகளையும் உள்ளடக்கியிருத்தலால், சைவம் ஒரு முழுமையான நெறியாகக் கொள்ளப்படுகிறது சைவத்தின் மேன்மையையும், பெருமையையும், தொன்மைச் சிறப்பையும், சைவம் காட்டும் நெறியின் அருமையையும் அர்த்தத்தையும் சரிவர உணர்ந்து கொண்டால், வீணான விதண்டா வாதங்களுக்கோ, பிறழ்வான நடத்தைகளுக்கோ, எந்தவித உயர்வு தாழ்வுகளுக்கோ இடமிருக்க முடியாது.

சைவம் காட்டும் வழி அன்புவழி; சைவம் காட்டும் நெறி, அறநெறி; நீதி நெறி சைவம் சிவசம்பந்தம் பெற்றிருப்பதனால் அன்பும், அறனும், நீதியும் கொண்டு இலங்குகிறது. எங்கு அன்பு உண்டோ அங்கே சைவம் உள்ளது. எங்கு அறமும் நீதியும் விளங்குகின்றனவோ, அங்கு சைவமும் வாழுகிறது. அன்பும், அறனும், நீதியும் வாழுமிடங்களில் அமைதி, நிம்மதி, சாந்தி, சமாதானம் என்பன அகத்திலும் புறத்திலும் வாழும் என்பது உறுதி.

''மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்''

## சைவசமயப் பெருநாட்கள்

### (ஆடிப்பூரணை முதல் ஆவணிப் பூரணை வரை)

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடி | 18 உ | (03-08-2001) | வெள்ளி | பூரணை விரதம் |
| | 23 உ | (08-08-2001) | புதன் | சங்கடஹர சதுர்த்தி |
| | 27 உ | (12-08-2001) | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| | 31 உ | (16-08-2001) | வியாழன் | பிரதோஷ விரதம் |
| ஆவணி | 01 உ | (17-08-2001) | வெள்ளி | ஆவணி மாதப் பிறப்பு |
| | 02 உ | (18-08-2001) | சனி | அமாவாசை விரதம் |
| | 06 உ | (22-08-2001) | புதன் | விநாயக சதுர்த்தி விரதம் |
| | 08 உ | (24-08-2001) | வெள்ளி | ஷஷ்டி விரதம் |
| | 12 உ | (28-08-2001) | செவ்வாய் | ஆவணி மூலம் |
| | 15 உ | (31-08-2001) | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| | 16 உ | (01-09-2001) | சனி | நடேசரபிஷேகம் |
| | 17 உ | (02-09-2001) | ஞாயிறு | பூரணை விரதம், உமாமகேஸ்வர விரதம் |

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

விஷு ஹூ ஆடி மீ 18 உ (03-08-2001)


## சைவசமய பரிபாலனத்தில் சைவப்புலவர்களின் பங்கு

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் நாற்பத்தோராவது வருடாந்த மாநாட்டில் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை அவர்கள் இவ்வாண்டு பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு விடுத்த வேண்டுகோள் இவ்விதழின் முக்கிய செய்தியாகும். இவ்வேண்டுகோளின் ஆழ, அகலத்தைப் புதிய பட்டதாரிகள் மட்டுமன்றி, சைவசமய வளர்ச்சியில் உண்மையான அக்கறையுள்ளவர்கள் அனைவரும் சிந்தனைக்கெடுத்துக் கொள்வது நல்லது.

சைவசமயத்துக்கு வலுவான கட்டுக்கோப்புள்ள தலைமைத்துவக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அக்கட்டமைப்பு மூலம் சுயநலமற்ற - சைவ சமூகத்தின் சமய, சமூக, கலாசார, பொருளாதார முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட - சைவப் பிரசாரகர்கள், குருமார்களைப் பயிற்றுவித்தலின் அவசியத்தையும் கடந்த இரண்டரை ஆண்டுகளாக இப்பந்திகளில் வலியுறுத்தி வந்துள்ளோம்.

இப்பிரேரணைக்கு விடை தருவது போன்று தமது செயற்பாடுகள் பேச்சுக்கள் மூலம் சிலர் பதில் இறுத்தனர். சமயத் தலைவர்கள் எனத் தம்மை மதிக்க வேண்டுமென எதிர்பார்ப்பவர்கள் அரி, பிரமர்கள் போல ''நானே அதிபதி, நானே அதிபதி'' எனப் போட்டியிட்டுக் கொண்டு கிளர்ந்தெழுந்ததையும், விரல்விட்டு எண்ணக் கூடிய தொகையினரை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள சில இந்து / சைவ சமய அமைப்புக்களின் தலைவர்கள், ''எனது அமைப்புத்தான் அத்தலைமைத்துவத்திற்கு உரியது; மற்றெல்லா அமைப்புக்களும் எனது அமைப்பைத் தலைமை அமைப்பாக ஏற்று ஒன்றுபட வேண்டும்'' எனக் எடுத்து இயம்ப ஆரம்பித்தமையும் உண்மைச் சைவாபிமானிகளை மனமுடைய வைத்தது.

எழுத்துக்கலை கைவந்தவர்கள் அனைவரும் சைவசித்தாந்தம், சைவக் கோட்பாடுகள் பற்றி விமர்சிக்கலாம், எழுதலாம் என்ற வகையில் நடந்து கொண்டதுவும் அதற்குச் சில ஊடகங்கள் களமமைத்துக் கொடுத்ததுவும் நல்ல உள்ளங்களை விசனமடையச்செய்தது. எனினும் இவற்றினால் மனம் சோர்ந்து விடாது தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.

இப்பின்னணியில் சைவப் புலவர் சங்கத் தலைவரின் வேண்டுகோள் பலமடங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

எதுவித அடிப்படைக் கோட்பாடுகளுமின்றி சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப சமயக் கோட்பாடுகளை வியாக்கியானஞ் செய்பவர்களே தம்மை சமயத் தலைவர்களாக - குரல் தரவல்ல அதிகாரிகள் போல - வெளிப்படுத்தி நடந்து கொள்கின்றனர். இவர்களது செயற்பாடுகளே மக்களிடையே சைவசமய வழிபாட்டு முறைகள், அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிச் சந்தேகங்கள் எழக் காரணமாகின்றன.

இதனை நிவர்த்திக்க, சைவமக்களிடையே எழக்கூடிய சந்தேகங்களுக்கு தீர்க்கமான விடை தரவல்ல தலைமைப்பீடமொன்று அமைதல் வேண்டும். இதன் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு சைவர்கள் ஒழுகுதல் வேண்டும். இத்தலைமைப்பீடம் வேத, சிவாகமங்கள், சைவ சித்தாந்த சாஸ்திரங்கள், திருமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்ந்து முடிவுகள் எடுத்தல் வேண்டும். இத்தலைமைப் பீடத்தில் ஒரு அறிஞர்சபை இருத்தல் வேண்டும். இந்த அறிஞர் சபைமூலம் ஐயப்பாடுகள், பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தே தலைமைப் பீடம் தீர்மானங்கள் எடுத்தல் வேண்டும்.

இவ்வாறமையும் அறிஞர் சபையில் சைவப்புலவர்களதும் சைவப்புலவர்கள் சங்கத்தினதும் பங்களிப்பு முக்கியமானதொன்றாக அமையும். அவர்கள், சங்கத் தலைவர் கூறியிருப்பதுபோல், சித்தாந்த சாஸ்திர, திருமுறைகளின் அடிப்படையில் தமது கருத்துக்களை ஆணித்தரமாக - திட்டவட்டமாக - வெளிப்படுத்த வேண்டும்.

பிரேரிக்கப்பட்டுள்ள தலைமைத்துவக் கட்டுப்பாட்டின் கீழ் அமைய வேண்டிய சைவப்பிரசாரகர்கள், குருமார்கள் பயிற்சிக் கல்லூரியின் உருவாக்கத்திலும் சைவப்புலவர்களின் பங்களிப்பும் சைவ பரிபாலனசபைப் பரீட்சைப் பகுதியினரால் பயிற்றுவிக்கப்படும் சித்தாந்த பண்டிதர் போன்றோர்களின் பங்களிப்பும் மிக முக்கியமானதாக இருத்தல் வேண்டும்.

சைவப்புலவர்களுக்கும், சிந்தாந்த பண்டிதர்களுக்கும் எக்காலத்திலும் பாடசர்லை ஆசிரியர் பதவிகள் கிடைக்கும் என எதிர்பார்க்கக் கூடாது. பிரேரிக்கப்பட்டுள்ள உத்தேச தலைமைப்பீடம் இவர்களைப் போன்றோரை சைவ பிரசாரகர்களாகவும் சைவ மக்களின் சமய, சமூக, பொருளாதார தேவைகளைக் கவனிக்கும் அதிகாரிகளாகவும் பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் நியமித்து அவர்கள் மூலம் சமய வளர்ச்சியில் ஈடுபட வேண்டும்.

ஆசிரிய சேவையில் உள்ள சைவப் புலவர்கள், சித்தாந்த பண்டிதர்களைப் பகுதி நேர பிரசாரகர்கள், அதிகாரிகளாகப் பணியாற்றச்செய்து அவர்களது சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தலைமைப்பீடத்தின் முழு நேர ஊழியர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கு அரசாங்க பாடசாலையொன்றில் சேவையாற்றும் சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் பெறும் ஊதியம், இதர சலுகைகள் யாவும் வழங்கப்படவேண்டும். இவற்றை நடைமுறைப் படுத்தக்கூடிய நிதிவளம் உள்ளதாக தலைமைப்பீடம் அமைதல் வேண்டும்.

மேற் கூறியவாறன்றி, சைவப்புலவர்களும் சித்தாந்த பண்டிதர்களும் பாடசாலை நேரத்தில் பாடசாலைகளிலும் அதுவொழிந்த நேரங்களில் தனியார் கல்வி நிறுவனங்களிலும் பாடசாலைச் சமய பாடப்புத்தகங்களிலுள்ள பாடங்களைக் கற்பிக்க உபயோகமாவார்களாயின், அது அவர்களது சமய அறிவை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதாக மாட்டாது.

## விநாயக மகாசதுர்த்தி: 22-08-2001 புதன்கிழமை:

# கணபதி பொற்சரணஞ் சரணமடைகின்றாம்

கீழே தரப்பட்டுள்ள எட்டுப்பாடல்களும் "தோத்திராட்டகம்" என வழங்கப்படுகிறது. இவற்றை மூன்று நாட்கள் முப்பொழுதும் ஓதினோர் எல்லாப் பேறுகளையும் பெறுவர்; எட்டு நாட்கள் ஓதினோரும் சதுர்த்தியன்று எட்டு முறை ஓதினோரும் அட்டமா சித்திகளைப் பெறுவர்; நாள் தோறும் பத்து முறையாக இரண்டு மாதம் ஓதினோர்க்கு அரசர் வசியமாவர்; அவ்வாறு இருபத்தொரு முறை ஓதினோர் மக்கட்பேறு, கல்வி, செல்வம் முதலிய எல்லா நலன்களையும் அடைவர்" என விநாயக புராணத்தில் காசிபர் முதலியோர் அனுட்டித்த படலத்தில் கூறப்பட்டுள்ளது.

பந்த மகற்றும் அனந்தகுணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ,
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி யிருந்து கரக்குமோ,
சந்த மறைஆ கமங்கலைகள் அனைத்தும் எவன்பால் தகவருமோ,
அந்த இறையாங் கணபதியை அன்பு கூரத் தொழுகின்றாம். 1.

உலக முழுதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருளெவன், அவ்
வுலகிற் பிறங்கும் விகாரங்கள் உறாத மேலாம் ஒளியாவன்,
உலகம் புரியும் வினைப்பயனை ஊட்டுங் களைகண் எவன், அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரண மடைகின்றாம். 2.

இடர்கள் முழுதும் எவனருளால் எரிவீ ழும்பஞ் செனமாயும்,
தொடரும் உயிர்கள் எவனருளால் சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக் கருமம் எவனான் முடிவுறும், அத்
தடவு மருப்புக் கணபதிபொற் சரணஞ் சரண மடைகின்றாம். 3.

மூர்த்தி யாகித், தலமாகி, முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி, அறிந்தறியாத் திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி, நாளும் அறியாமை அகற்றி அறிவிப் பானெவன், அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரண மடைகின்றாம். 4.

செய்யும் வினையின் முதல்யாவன், செய்யப் படுமப் பொருள் யாவன்
ஐய மின்றி உளதாகும் அந்தக் கருமப் பயன்யாவன்,
உய்யும் வினையின் பயன்விளைவின் ஊட்டிவிடுப்பான் எவன், அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப் புரிந்து சரண மடைகின்றாம். 5.

வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன் யாவன், விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும் விமலன் யாவன், விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும் நாதன் எவன், எண் குணன் எவன், அப்
போத முதலைக் கணபதியைப் புகழ்ந்து சரண மடைகின்றாம். 6.

மண்ணின் ஓர்ஐங் குணமாகி வதிவான் எவன், நீ ரிடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன், தீயின் மூன்றாய் நவில்வான் எவன், வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன், வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன்அக் கணபதியை அன்பிற் சரணமடைகின்றாம் 7.

பாச அறிவிற் பசுஅறிவிற் பற்றற் கரிய பரன்யாவன்,
பாச அறிவும் பசுஅறிவும் பயிலப் பணிக்கு மவன்யாவன்,
பாச அறிவும் பசு அறிவும் பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத் திகழச் சரண மடைகின்றாம். 8.

உ

# உன்னடி போற்ற ஒரு வரம் தா

— திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் —

ஆதிசங்கரர் அருளிய 'சிவானந்த லஹரி' சிவபக்தி மயமான சிறந்த சிவஸ்தோத்திரமாகும். இதில் ஒரு பாடலை முன்னொரு கட்டுரையில் விபரித்திருந்தோம். இக்கட்டுரையில் மற்றொரு தோத்திரத்தை விளங்கி உணர முயற்சிப்போம்.

**ஸஹஸ்ரம் வர்த்தந்தே ஜகதி விபுதா**
**க்ஷுத்ரபலதா**
**நமன்யே ஸ்வப்னே வா**
**ததனுஸரணம் தத்க்ருதபலம்/**
**ஹரி ப்ரஹ்மாதீனாமபி நிகடபாஜா**
**மஸுலபம்**
**சிரம் யாசே சம்போ சிவ தவ**
**பாதாம்போஜ - பஜனம்//**

என வேண்டி நிற்கிறார் ஆதிசங்கரர்.

நாம் நாளும் பொழுதும் எத்தனையோ கோவில்களுக்குச் சென்று, பலபல தேவைகளுக்கேற்ப வேண்டுதல் செய்து பலன் பெற முயல்கின்றோம். இவ்வுலகில் ஆயிரக்கணக்கான அற்பப்பலன் தரும் தேவர்கள் உள்ளனர் என இந்தப் பாடல் கூறுகிறது. லௌகீக தேவைகளுக்கேற்ற பலனை அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அவற்றினால் என்ன பயன்? இவை அனைத்துமே நிலையற்றவை. அவற்றால் பெறும் இன்பமும் நிலையற்றது. அதனாலே தான் மணிவாசகப்பெருமான்,

''போகம் வேண்டி வேண்டிலேன்
புரந்தராதி இன்பமும்'' என்பார்.

தேவேந்திரன் முதலானோர் அனுபவிக்கும் இன்பங்கூட வேண்டத்தக்கதல்ல. இறையின்பம் துய்ப்போருக்கு இவையெல்லாம் இன்பமாகத் தோன்றுமா?

அதனாலேயே தத் அனுசரணம்- அவர்களைப் பின்பற்றி வழிபடுதலையும், க்ருதபலம் - அதனால் பெறும் பலன்களையும், ஸ்வப்னே வா நமன்யே - கனவிலே கூடக் கருதமாட்டேன் என உறுதிபடக் கூறுகின்றார். அவர் வேண்டுவது பேரின்பம்.

இந்தத் தேவர்களென்ன? அரியும் அயனுமே அருகிலிருந்துங்கூட காயத்தில் காணமுடியாத பாதகமலங்கள் அந்தச் சிவபிரானுடையவை.

''மாலறியா நான்முகனும் காணா'' மலரடிகளை, அவர்கள் அண்மையிலிருந்தும் காணவொட்டா திருப்பாதங்களை, இயற்கையில் - இறைவனின் ஒவ்வொரு படைப்பிலும்

''கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்''

எனக்காண்பதற்கு பக்தி வேண்டும். இப்பாடலிலும் ஹரி, பிரமா ஆகியோரும் காயத்தில் காண முடியாத சம்புவின் பாதாம் புஜங்களை போற்றுவதை என்றென்றும் யாசிக்கின்றார். அவர் யாசிக்கும் போதும் சாதாரணமாக வேண்டவில்லை. 'சிரம் யாசே' என்கின்றார்.

சுந்தரமூர்த்தி நாயனார் நித்தலும் கைதொழும்போது நீள நினைத்தார்.

**''நீள நினைந்தடியேன் நினை**
**நித்தலும் கைதொழுவேன்''**

எனப்பாடும் போது அவர் நீள நினைப்பதை எண்ணி வியக்கவே தோன்றும். எம்மால் இறைவனை நினைக்கவே முடிவதில்லை. அப்படியொரு அவசர யுகம். எப்படியோ ஒரு ஐந்து நிமிடம் இறைவனை நினைத்து வணங்க ஆரம்பித்தாலும் தொடர்ச்சியாக ஐந்து நிமிடங்களென்ன ஐந்து கணங்களாவது நினைக்க முடிகிறதா? முடிந்தால் அவர்கள் பேறுபெற்றவர்கள்தான். ஆனால் தம்பிரான் தோழர் நீள நினைக்கிறார். அதே போல் ஆதிசங்கரரும் நீள யாசிக்கின்றார். அந்த அரி அயனறியா மலரடிகளை வணங்க வேண்டுமென்று மட்டுந்தான் யாசிக்கின்றார்.

முதல் வரியில் வரும் ஆயிரம் தேவர்களையும் வணங்குவோர் பலன் கருதி வணங்குகின்றனர். ஆனால் இவர் வணங்குவதை மட்டுமே வேண்டி யாசிக்கிறார். இவ்வாறு பயன் கருதாது வழிபட எம்மால் முடியுமா? முடிந்தால் எம்முள் பக்தி தோன்றியுள்ளதெனலாம்.

சிவானந்த லஹரி எனும் ஆனந்த வெள்ளத்தின் சில துளிகளைச் சுவைப்பது ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவருப்பதாக அமையுயென்பது திண்ணம்.

## சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் கூறியவை

- சின்னவயதிலேயே சத்தியம், நேர்மை, மன அடக்கம், மன உறுதி, மனத்திருப்தி ஆகிய இவற்றைப் பழகிக் கொண்டால், இறக்கும் வரைக்கும் இவைகள் நிலைத்திருக்கத்தக்கவை. அறப்பற்றும் பிற உயிர்களில் இரக்கமும், யாவரும் கடவுளுடைய குழந்தைகள் என்ற எண்ணமும் உறுதிப்பட்டால் ஆசைகள் தாமாகவே அடங்கி நிற்கும்.
- நாம் ஒருவரைக் காணும்போது அவர் சிவபிரானது திருவடிகளைச் சேருவதற்கு யாத்திரை செய்பவர் என்ற எண்ணமே நமது மனதில் முதல் உண்டாதல் வேண்டும். அவர் நம்மிடம் வந்த தொழிற்தொடர்பு இரண்டாவதாக எண்ணத்தக்கது.
- திருவாசகத்தை ஓதச் சந்தர்ப்பம் தரும் மனிதப்பிறவி கிட்டுமாயின் எத்தனை தடவை அவ்வாறான பிறவி வருகினும் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளலாம்.

# அரனார்க்கு ஆறுமுகன் செய்த உபதேசம்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பது இருமை (பெருமை) பொருந்திய செவி என்பதைக்காட்டும்.

**முருகப்பெருமான் செய்த உபதேசம்:**

''மைந்த எமக்கருள் மறையின் என்னாத் திருச்செவியை நல்கச் சண்முகன் குடிலை என்னும் ஒன்றொரு பதத்தின் உண்மை உரைத்தனன்'' எனக் கந்தபுராணம் இவ்விவரத்தைத் தெரிவிக்கிறது. முருகப்பெருமான் செய்த உபதேசம் குடிலை அல்லது ஓம் எனப்படும் பிரணவ மந்திரத்தின் உண்மையாகும். இந்த மந்திரமே,

**''மறை எவற்றிற்கும் ஆதியின் நவில்வான்**
**நின்றதோர் தனிமொழி''**

எனக் கந்தபுராணம் அறிவிக்கின்றது. இந்தப் பிரணவ மந்திரமாகிய ''ஓம்'' என்பதிலிருந்தே ''ஓம் நமசிவாய'' என்னும் ஆறெழுத்தும் விரியும் என முருகவேள் விளக்கினார் எனவும் கொள்ளலாம். இவ்வோரெழுத்தே அ, உ, ம் என்னும் மூன்றெழுத்தாகும். எழுதும்போது விந்துவாகவும், உச்சரிக்கும் போது நாதமாகவும் இவை அமைகின்றன. இம்மூன்று எழுத்துக்களுடன் வரி வடிவாகிய விந்துவும், ஒலி வடிவாகிய நாதமும் சேர்ந்து ஐந்தாகின்றன. இதை, ''ஓங்காரமாம் ஐந்தெழுத்தாற் புவனத்தை உண்டு பண்ணி'' என்பதாகக் காட்டுகிறார் தாயுமானவர். நமசிவாய என்பது தூல பஞ்சாட்சரம். சிவாய நம என்பது சூக்கும பஞ்சாட்சரம். ''சி'' சிவத்தையும் ''வ'' அருட்சத்தியாகிய அம்மையையும், ''ய'' உயிரையும் ''ந'' திரோதானம் அல்லது மறைப்பையும், ''ம'' மலத்தை அல்லது மயக்கத்தையும் குறிக்கின்றன. இவ்வுண்மைகளை யெல்லாம் முருகப்பெருமான் சிவபெருமானுக்கு உபதேசித்தார் என்பதை,

**''தகரி யெனும் குண்டலியில் அழலோம்பி நகரதிரோ**
**தானத் தோடே**
**மகரமலம் யகரம் உயிர் சிகரமிசை சத்திமற்றை**
**வகரமாகும்.**
**நகர மகரங் களந்த யகரமுற வகையினடு**
**வணையதாகும்**
**சிகர வக ரங்கடனை முதலாயஞ்**
**செழுத்துரைத்தான் செங்கை வேலான்''**

என்னும் தீர்த்தகிரிப்புராணம் விளக்குகின்றது.

**பஞ்சாட்சரத்தின் அருமையும் பெருமையும்:**

இப்பஞ்சாட்சரத்தின் அருமையையும் பெருமையையும் நுட்பங்களையும் குருவிடமிருந்து பெறுதல் முறையாகும். எனினும் இதன் அருமையை இரண்டொரு ஆதாரங்களிலிருந்து விளக்கலாம். இருக்கு, யசுர், சாமம் என்னும் மூன்று வேதங்களில் நடுவில் நிற்பது யசுர் வேதம். இதற்கு ஏழு காண்டங்கள் உள்ளன. இவ்வேழு காண்டங்களின் நடுமையத்தில் இருப்பது நான்காவது காண்டம். இந்த நடுக் காண்டத்தில் ஏழு சம்மிதைகள் உள்ளன. இந்த ஏழு சம்ஹிதைகளிலும் நடுமையசம்ஹிதை ஸ்ரீ ருத்திர சம்ஹிதை, இதில் முன்நூற்றொரு சிவநாமங்கள் உள்ளன. இம் முந்நூற்றொரு நாமங்களில் நடுமையமாக விளங்குவது நூற்றைம்பத்தோராவது சிவநாமம் பஞ்சாட்சரம். இது போன்றே திருநாவுக்கரசுநாயனார் இயற்றியருளிய மூன்று திருமுறைகளில், நடுத்திருமுறையாகிய ஐந்தாம் திருமுறையில் நடுப்பாகத்தில் உள்ள பதிகத்தின் நடுமையத்தில் இப்பஞ்சாட்சரம் எடுத்தியம்பப் பெறுகிறது. இப்பஞ்சாட்சரமே சிவபெருமான் திருநாமம் என்பதை,

**''எந்தையார் திருநாமம் நமச்சிவாய என்றொழுதவார்க்கு இரு விசும்பில் இருக்கலாமே''**

எனத் திருநாவுக்கரசு நாயனார் குறிப்பிடுகிறார்.

பஞ்சாட்சரப் பதிகங்கள் தேவாரத் திருமுறையில் உள்ளன. ''துஞ்சலும்'' ''காதலாகி'' எனத்தொடங்கும் திருப்பதிகங்களும், ''சொற்றுணை'' எனத்தொடங்கும் திருநாவுக்கரசு நாயனார் திருப்பதிகமும், ''மற்றுப்பற்றெனக்கின்றி'' எனத்தொடங்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகமும் நமக்குப் பஞ்சாட்சரத்தை உபதேசிப்பனவாகவுள்ளன. மணிவாசகனார் திருவாசகம் பஞ்சாட்சரத்துடன் தொடங்குகின்றது. திருவாசகத்தில் பல இடங்களில் இதன் பெருமை எடுத்துக் கூறப்படுகிறது.

**ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனில்**
**நீங்கா வெழுத்தேநிறை சுடராம் — ஆங்காரம்**
**அற்றார் அறிவரணி யம்பலத்தா னாடலிது**
**பெற்றார் பிறப்பற்றார் பின்''**

என்னும் உண்மை விளக்கத்தில் ஓம் என்னும் பிரணவ வடிவில், சிவபெருமான், ஒன்றுமாய்ப் பலவுமாய் நின்று, எல்லா உயிர்களையும் இயக்குவதன் பொருட்டு, பஞ்சாட்சர மயமாய் ஐந்தொழிலையும் இயக்குகிறார் என்பது கூறப்படுகிறது.

**பஞ்சாட்சரப் பயன்:**

இத்தகைய பிரணவ மந்திரத்தை ஓதி ஓதி எத்தகைய பயனை அடைய இயலும் என்பதை அருணகிரியார் கந்தரனுபூதியில் நமக்குக் குறிப்பாகக் காட்டுகிறார்.

**''நாதா குமரா நமஎன் றரனார்**
**ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்**
**வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்**
**பாதா குறமின்பத சேகரனே''**

இப்பாடலில் முதல் இரண்டடிகளில் கேள்வியுள்ளது. பின் இரண்டடிகளில் அக்கேள்விக்கு விடையுள்ளது. முருகப்பெருமான் திருப்பாதத்தை விண்ணவர் சூடிக்கொள்கிறார். அத்தகைய பெருமை வாய்ந்தவர் பக்குவமடைந்த உயிராகவுள்ள வள்ளியம்மையாருக்கு அருள்புரிகிறார். இது போன்றே ஆறறிவு பெற்றுள்ள மக்கள் எந்தையார் திருநாமமாகிய பஞ்சாட்சரத்தை இடைவிடாது ஓதுவதால் அப்பெருமான் திருவருளைப் பெறலாம். என்னும் உண்மையையும் அறிந்துகொள்ளலாம். ''வேறு மார்க்கங்களில் சென்று மனமுடைந்து விடாதீர்கள். ஆறுமுகப்பெருமான் கூறியுள்ள கருத்தை மனத்தில் இருத்தி நல்வாழ்வு பெறுங்கள்'' என்னும் கருத்தைத் தெரிவிக்கிறார் அருணகிரியார்.

**''துருத்தி எனும்படிக் கும்பித்து**
**வாயுவைச் சுற்றிமுறித்**
**தருத்தி உடம்பை ஒறுக்கில்**
**என்னாம் சிவயோகம் எனும்**
**குருத்தை அறிந்து முகமாறுடைக்**
**குருநாதன் சொன்ன**
**கருத்தை மனத்தில் இருத்தும்**
**கண்டீர் முத்தி கைகண்டதே''**

— கந்தரலங்காரம்.

எனவே ஆறுமுகன் அரனார்க்குபதேசத்தின்படி நாம் நம் வாழ்க்கையை நடத்தி நற்பேறு பெறுவோமாக.

# சைவபரிபாலன சபை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இந்து உயர் நிலைப்பாடசாலைக்கு சிறந்ததொரு கல்வித் திட்டத்தை உருவாக்குவதில் திரு. சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்கள் தீவிரமாகச் செயற்பட்டார். கொழும்பு றோயல் கல்லூரியிலும் கல்கத்தா பல்கலைக்கழகத்திலும் கல்விகற்ற அனுபவமும் கல்கத்தாவில் கல்வி கற்ற போது அப்போதைய இந்திய தேசிய காங்கிரஸ் தலைவரான சுரேந்திரநாத் பனர்ஜியினுடைய கொள்கைகளால் கவரப்பட்டிருந்தமையும், திரு. நாகலிங்கம் அவர்களை இப்பணிக்கு உரியவராக்கியது. அவர் இவ்வுயர் பாடசாலை இங்கிலாந்திலுள்ள பொதுப்பாடசாலைகள் போன்ற மாதிரியைக் கொண்டிருக்கும் அதே சமயம், மாணவர்களுக்கு சைவ சமய உணர்வைக் கொடுக்கக் கூடியவொரு நிலையமாகவும் விளங்க வேண்டுமென்று விரும்பினார்.

## விக்ரோறியா வாசிகசாலை:

இச்சந்தர்ப்பத்தில் சைவபரிபாலன சபை உபதலைவரும் இந்து உயர் நிலைப் பாடசாலை நிறுவுதற்கு அதி முக்கிய பங்காற்றியவருமான நியாயவாதி சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களும் வேறு சிலரும் சேர்ந்து 1887 ஆம் ஆண்டு ஆரம்பித்ததாக நாம் ஏற்கனவே கூறிய விக்ரோறியா வாசிகசாலையின் நடவடிக்கைகள் பற்றியும் சிறிது அறிந்து கொள்ளுதல் நன்று. ஏனெனில் இவ்வாசிகசாலை நிர்வாகிகளில் பெரும்பகுதியினர் சைவபரிபாலனசபை நிர்வாகிகளாகவும் இருந்தமையாகும்.

*18-02-1891* ஆம் நாள் நடைபெற்ற இவ்வாசிகசாலையின் மூன்றாவது வருடாந்தக் கூட்ட அறிக்கையில் காணப்படும் சில விடயங்கள் இவ்வாசிகசாலையின் மூன்றாண்டுகால வளர்ச்சியைச் கோடிட்டுக் காட்டுப; இவ்வாசிகசாலையின்.

தலைவர்:

திரு. சி நாகலிங்கம்
(நியாயதுரந்தரர்)

உபதலைவர்கள்:

திரு. ரி சங்கரப்பிள்ளை
திரு. வி. காசிப்பிள்ளை
(இருவரும் உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள்)

கணக்குப் பரிசோதகர்:

திரு. ஆர். கந்தையா
(மாவட்ட நீதிமன்ற பிரதம எழுதுவினைஞர்)

செயலாளர்:

திரு. அ. சபாபதி

பொருளாளர்:

திரு. சித. மு. பசுபதிச் செட்டியார்

குழு அங்கத்தவர்கள்:

திரு. சி. சண்முகம், திரு. ஏ. சின்னப்பா, திரு எம். எம். காதர் மொகிடீன், திரு. எஸ். துரையப்பா, திரு ஏ. செல்லப்பாபிள்ளை, திரு. வி. சின்னத்தம்பி, திரு. எம். எஸ். நாகலிங்கம், திரு எஸ். சபாரட்ணம், திரு வி. சண்முகம், திரு வி. முதலியார் குமாரவேலுப்பிள்ளை, திரு. த. கைலாசபிள்ளை, திரு. சி. தம்பையா.

இவ்வாசிகசாலையில் *1888* ஆம் ஆண்டில் அறுபது பேரும் *1889* இல் எழுபதுபேரும் *1890* இல் எழுபத்து நான்கு பேரும் சந்தாதாரராக இருந்திருக்கிறார்கள். இவ்வாசிகசாலைக்கு வருடந்தோறும் நூற்றி முப்பத்து நான்கு ரூபா (அக்காலத்தில்) பெறுமதியான செய்தித்தாள்களை அதன் தலைவர் திரு. சி. நாகலிங்கம் உபகரித்து வந்துள்ளார். கோயம்புத்தூரைச் சேர்ந்த திரு வி. எஸ். குருநாதபிள்ளை என்பவர் பல இந்தியச் செய்தித் தாள்களை அனுப்பியுதவியுள்ளார். இரண்டாம் ஆண்டு சந்தாப்பணமாக ரூபா 624-50 சேர்ந்துள்ளது.

வாசிகசாலை மண்டபத்தில் இரண்டாவது வருடத்தில் பல பொதுசன அக்கறையுள்ள தலைப்புகளில் ஆறு பகிரங்க சொற்பொழிவுகள் உள்நாட்டு, வெளிநாட்டு பிரமுகர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளன. இருபத்து நான்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இவ்வாசிகசாலையில் கிடைக்கச் செய்யப்பட்டது. 1890 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் சேர் (பின்னர்) பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்த போது இவ்வாசிகசாலைக்கும் விஜயம் செய்து அதன் நோக்கங்களைப் பெரிதும் பாராட்டியிருந்தார்.

## Hindu Organ பத்திராதிபர்:

இந்துசாதனத்தின் ஆங்கில வெளியீடான "Hindu Organ" இன் பத்திராதிபராகவிருந்த திரு. தா. செல்லப்பாபிள்ளை அவர்கள் 1891 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உடல்நலக் குறைவு காரணமாக பத்திரிகாசிரியர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். நான்கு மாதங்கள் பத்திரிகாசிரியராக எவரும் நியமிக்கப்படவில்லை. சிலர் எழுதி உதவிய ஆசிரிய தலையங்கங்களைக் கொண்டே ஆங்கிலப் பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. இவ்வாறு ஆசிரிய தலையங்கங்கள் எழுதி உதவியர்வகளில் திரு. அ. சபாபதி அவர்கள் ஒருவர். *1891* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *18* ஆம் திகதி வெளியான "Hindu Organ" பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம் திரு. சபாபதி அவர்கள் எழுதிய முதல்ஆசிரிய தலையங்கமாகும்.

கரவருடம் வைகாசி மாதம் ஏழாம் திகதி (*19-05-1891*) கூடிய சபையின் நிருவாக சபைக்கூட்டத்தில் "திரு. ஆ. கதிரவேலு, திரு. அ. சபாபதிப்பிள்ளை ஆகிய இருவரையும் இந்துசாதனப் பத்திரிகைக்கு ஆங்கிலப் பத்திரிகாசிரியர்களாக நியமித்துக் கொள்ளுதல் வேண்டும்" என்ற தீர்மானம் திரு. சி. நாகலிங்கபிள்ளை அவர்கள் முன்மொழிய திரு. சித. மு பசுபதிச்செட்டியார் அவர்கள் வழிமொழிய ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## சிதம்பரம் மாநாட்டில் சபைப்பிரதிநிதிகள்:

சிதம்பரத்திலே நடராஜப் பெருமானுக்கும் சிவகாமசுந்தரி அம்மையாருக்கும் சிற்சபை, கனகசபை விமானங்களுக்கும் கர வருடம் சித்திரை மாதம் நான்காம் நாள் (*18-04-1891*) சம்புரோட்சண மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போது சிதம்பரத்திலே ஆரிய தர்ம மகாசபை என ஒரு சபை கூடிற்று. இச்சபையில் தென்னிந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பலவேறு ஸ்தாபனங்களாலும் ஊரவர்களாலும் அனுப்பப்பட்ட அறுபது பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சைவபரிபாலன சபை சார்பில் ஸ்ரீ. அ. அருணாசல சாஸ்திரிகளும் திரு. த. கைலாயபிள்ளை அவர்களும் கலந்து கொண்டனர்.

(அடுத்த இதழில் தொடரும்)

# சைவபூஷணம் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கூட ஒவ்வொரு வார இறுதியிலும் யாழ் வந்து இப்பணியையும் சாந்தையர் மட கற்பக விநாயகர் ஆலயப் பணி, சைவசமய அபிவிருத்திக் கழகப் பணிகளை ஆற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

1978 ஆம் ஆண்டு முதல் இன்று வரை சபையின் பரீட்சைச் செயலாளராகவிருந்து சைவநெறித்தேர்வுகள், சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், சைவசித்தாந்த பால பண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் தேர்வுகளை வருடந்தோறும் கிரமமாக நடாத்தும் பாரிய பொறுப்பினை ஏற்றுத் திறம்பட ஆற்றி வருகிறார்.

1991 ஆம் ஆண்டில் சபையின் சமயப் பிரசார அமைச்சர் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டு 1994 ஆம் ஆண்டு வரை அப்பதவி மூலம் பல பணிகளை ஆற்றினார். 1998 ஆம் ஆண்டு முதல் சபை உபதலைவராகப் பணியாற்றி வருகிறார். 1995 அக்டோபர் இடம்பெயர்வின் பின், 1996 மே மாதத்தில் யாழ் நகரில் மக்கள் மீளக் குடியேறியபோது - சைவ பரிபாலனசபை அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் இயங்க முடியாத நிலையிலிருந்த போது - தனது இல்லத்தையே சபையின் பரீட்சைப் பகுதியாக மாற்றி, சபையின் பரீட்சைப் பகுதி தடங்கலின்றி நடைபெறுவதை உறுதி செய்து கொண்டார்.

பரீட்சை நிதியிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகம் கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு நிதியுதவி புரிவதற்காக ஒன்றரை இலட்ச ரூபா புலமைப் பரிசில் நிதியமொன்றை சைவபரிபாலன சபை ஏற்படுத்த மூலகாரணராகவிருந்தார். அத்துடன் பரீட்சை நிதியை முதலாகக் கொண்டு நாவலர் பெருமான், சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் போன்றோரின் நூல்கள் பலவற்றை அச்சிற்பதிப்பித்து பலரும் பயனடைய வைத்தார். இச்செயற்பாடுகள் அனைத்தையும் தாம் செய்விப்பதுபோற் காட்டிக் கொள்ளாது மேற்கொண்டமை அவரது தன்னலமற்ற தொண்டு மனப்பான்மையை வெளிப்படுத்தும்.

இவை தவிர சபையினரின் அகில இலங்கைச் சைவ மாநாடுகளின் அமைப்பாளராக, சபை நூற்றாண்டு விழா ஏற்பாட்டாளராக ஆற்றிய பணிகளும் பல.

## நாவலர் பாடசாலைப் பணிகள்:

நாவலர் பாடசாலைப் பழைய மாணவனான இவர் நாவலர் பாடசாலை பழைய மாணவர் சங்க உபதலைவராகவும் நாவலர் மகா வித்தியாலய நூற்றியைம்பதாவது நினைவு விழாச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். நாவலர்மேற் பெரும் பக்தி கொண்ட இவர், நாவலர் வழியில் பணியாற்றிவருவதோடு ஏனையோரையும் தன்போல் ஈடுபடத் தூண்டுபவர்.

வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் நூற்றாண்டு விழாவைத் தக்கபடி கொண்டாடவேண்டுமென்ற நோக்கோடு தம்முடன் நாவலர் பாடசாலையில் கல்வி கற்பித்துவந்த சக ஆசிரியர் திரு. சி. சீவரத்தினமவர்களோடு சேர்ந்து பெருமுயற்சி செய்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை நூற்றாண்டு விழாச் சபையை 26-04-1953 அன்று அமரர் சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் அமைத்து, பல பணிகள் ஆற்றப்படக் காரணமாகவிருந்தார். அதன் விளைவுகளுள் ஒன்றாக வே. கனகரத்தின உபாத்தியாயர் எழுதிய "ஆறுமுகநாவலர் சரித்திரம்" என்ற நூல் 1968 இல் மறுபதிப்பாக வெளிவந்தது.

நாவலரின் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை அரசுடைமையாக்கப்பட்டபோது நாவலரின் சொத்துக்கள் பலவும் அரசுடைமையானது. அவற்றை நிர்வகிக்க யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் தலைமையில் "நாவலர் தர்மகர்த்தா சபை"யொன்று 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அச்சபையில், பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் வகித்த அங்கத்துவம் பண்டிதமணி அமரத்துவமடைந்தபின் 1990 ஆம் ஆண்டு முதல் திரு. கந்தசாமி அவர்களைச் சேர்ந்தது. இவரது பெருமுயற்சியின் காரணமாகவே நாவலர் பாடசாலை முகப்பு நுழைவாயில் பாடசாலை முன்னாள் அதிபர், அமரர் திரு. ஐயாத்துரை மாகாண மேலதிகக் கல்விப்பணிப்பாளர் திரு. நா. தனிகாசலம்பிள்ளை ஆகியோரின் உதவியுடன் இன்றைய அழகுக் கோலத்துடன் காட்சியளிக்கிறது

1960 ஆம் ஆண்டு முதல் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நாவலர் தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்பட்டுவந்த பண்டிதர் வகுப்புகளிலும், சைவப்புலவர் சங்கம் நடத்திய வகுப்புகளிலும் இலவசமாக ஆசிரியசேவை ஆற்றியுள்ளார்.

பல்வேறு காலகட்டங்களில் கந்தபுராணச்சபை தலைவராகவும் நல்லை ஆதீனத்து சைவசித்தாந்தப் பேரவையின் பொருளாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

## சைவப்புலவர் சங்கப் பணிகள்:

1961 ஆம் ஆண்டில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் உருவாகக் காரணமாகவிருந்தவர்களுள் திரு. கந்தசாமி அவர்களும் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களும் முக்கியமானவர்கள். 1961 ஆம் ஆண்டுமுதல் சில வருடங்கள் தலைவராகவும் சில வருடங்கள் செயலாளராகவும் 1969 ஆம் ஆண்டு முதல் சமீப காலம் வரை சங்கத்தின் கௌரவ தேர்வுச் செயலாளராகவும் பணியாற்றி இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைகளை நடத்திப் பல சைவப்புலவர்கள் உருவாக வழி சமைத்தார்.

## கௌரவங்கள்:

பட்டங்கள், பதவிகள், பாராட்டு விழாக்களுக்காக அலைந்து, இரந்து வேண்டி நிற்பவர்களுக்குக் குறைவில்லாத இன்றைய கால கட்டத்தில், அவற்றிலிருந்து ஒதுங்கி நிற்பது சைவப்புலவரின் அருங்குணங்களுள் ஒன்று. அவர் பல நிறுவனங்களில் பல பொறுப்பான பதவிகளை வகித்த போதிலும், அவரது செயற்பாடுகள் எப்போதும் இலை மறை காயாகவே இருந்தன. வன்சொல் பேசுவது கிடையாது. தர்க்கம் புரிவது கிடையாது. யாராயினும் பொருத்தமற்ற செயல்களில் - பேச்சில் - ஈடுபட்டால் அதையிட்டுத் தர்க்கம் செய்யாது ஒதுக்கி விட்டு, தன்னாலான நற்கருமங்களை இயன்றளவில் முன்னெடுத்துச் செல்வது சைவப்புலவர் அவர்களின் மற்றுமோர் குணவியல்பு.

பட்டங்கள், பாராட்டுகள், கௌரவங்கள் அவரை வலிந்து சென்றடைந்தன.

1975 ஆம் ஆண்டு மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் "சிவநெறிச் செம்மல்" என்ற பட்டத்தையும் 1985 இல் சைவ பாதுகாப்புச்சபை "சிவனடியார் மணி" என்ற பட்டத்தையும், 2000 ஆம் ஆண்டில் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா நினைவு விழாக்குழுவினர் "சிவநெறிக் காவலர்" எனும் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தனர். இப்போ அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினர் "சைவபூஷணம்" பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

அமைதியும் சாந்தமுமே உருவான அடக்க சுபாவமுள்ள சைவப்புலவர் அவர்களின் வாழ்வு அர்ப்பணிப்பு மிக்கது; சிவதொண்டு புரிவோருக்கு முன்மாதிரியாக - வழிகாட்டியாக அமைந்துள்ளது. அன்னார் இன்னும் பல்லாண்டுகள் உடல் நலமுடன் வாழ்ந்து சிவத்தொண்டு செய்ய எல்லாம் வல்ல சிவபெருமானை வழுத்துவோமாக.

# சைவ மரபு பேணுக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் நாற்பத்தோராவது பட்டமளிப்பு விழாவும் முதுபெரும் சைவப் புலவரும் அர்ப்பணிப்பு மிக்க தன்னலங்கருதாத சிவதொண்டரும் சிவப் பணியாளருக்கு உதாரண புருஷனாகவும் வழிகாட்டியாகவும் செயற்படுகின்றவருமாகிய சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி அவர்களுக்கு ''சைவ பூஷணம்'' கௌரவப் பட்டமளித்துச் சிறப்பிக்கும் விழாவும் 22-07-2001 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற போது விழாவுக்குத் தலைமை தாங்கிய திரு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் புதிதாகப் பட்டம் பெறக் குழுமியிருந்த சைவப்புலவர்களுக்கும் இளஞ் சைவப்புலவர்களுக்கும் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

தமது தலைமையுரையில் திரு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் இலங்கைச் சைவப்புலவர் சங்க வரலாறு, நோக்கம், பட்டமளிப்பு வைபவங்கள், சைவபூஷணம் பட்டம் பெற்ற சைவப்புலவர் வ. கந்தசாமியின் பணிகள் பற்றி விரித்துக் கூறினார். அதன் சுருக்கம் பின்வருமாறு:

## வரலாறும் நோக்கங்களும்:

''அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் 1960-09-30 ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. தென்னிந்திய சைவசித்தாந்த மகா சமாசத்தினர் இந்தியாவிலே நடத்திவந்த சைவப் புலவர் பரீட்சையிலே சித்திபெற்ற சைவப்புலவர் வித்துவான் திரு. வ. செல்லையா, சைவப்புலவர் பண்டிதர் திரு. க. சச்சிதானந்தன், சைவப்புலவர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் அன்றைய இந்து சாதனப் பத்திராதிபர் திரு நம. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் சைவச்சான்றோர் பலர் சமுகமளித்திருக்க ''அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கத்தினை'' அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

இலங்கையில் சைவசித்தாந்த நெறியினை வரன்முறை பிறழாது முன்னெடுத்துச் செல்லவும், சமூகத்தில் விசேடமாக ஆசிரியர்கள் பன்னிரு திருமுறைகள், பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களை ஆழமாகக் கற்றுணர்ந்து சைவசமய உண்மைகளை ஐயந்திரிபறக்கற்று சமயப்பணிகளாற்றவும் வழிப்படுத்துவதே சங்கத்தை அமைத்தவர்களின் நோக்கமாக இருந்தது.

## பட்டமளிப்புக்கள்:

அன்று தொடக்கம் சங்கம் மூலம் தென்னிந்திய சைவசித்தாந்த மகா சமாஜத்தாரின் சைவப்புலவர் பரீட்சைக்குப் பலர் தோற்றி சித்தி பெற்றவர்களுக்குரிய ''சைவப்புலவர்'' பட்டங்களை சைவப்புலவர் சங்கம் இலங்கையிலே யாழ்ப்பாணம், கண்டி, மட்டக்களப்பு, கொழும்பு, வேலணை ஆகிய வெவ்வேறு இடங்களிலும் சைவப்புலவர் பட்டமளிப்பு விழாக்களை நடத்தி வழங்கி கௌரவித்தது. அவ்விழாக்களின் போது சமூகத்தில் சைவசமயத் தொண்டாற்றி மிளிரும் சைவப்பெரியார்களுக்கு ''சைவப் புரவலர்'', ''சைவபூஷணம்'' எனும் கௌரவப்பட்டங்களையும் வழங்கிக் கௌரவித்தது.

இதன்படி கண்டியில் நடைபெற்ற மகாநாட்டில் வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு ''சைவ பூஷணம்'' எனும் கௌரவப்பட்டம் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத் தக்கது. மற்றும் வேலணையில் நடைபெற்ற சைவப்புலவர் மகாநாட்டில் புங்குடுதீவு சித்தவைத்தியரும், ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களுடைய தந்தையாருமாகிய கா. கணபதிப் பிள்ளை அவர்களுக்கும், வேலணையூர் ஆசிரியர் வே. பேரம்பலம் அவர்களுக்கும் ''சைவ பூஷணம்'' பட்டம் வழங்கிக் கௌரவித்தோம்.

## சைவப்புலவர் வ. கந்தசாமி:

இன்று சைவப்புலவர் சங்கத்தினால் ''சைவபூஷணம்'' பட்டம் பெற இருக்கும் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி அவர்கள் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தம்மைச் சைவப் பணியில் திரிகரணசுத்தியோடு ஈடுபடுத்திக்கொண்டிருப்பவர். அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவராக, செயலாளராக, பரீட்சைச் செயலாளராகக் கடமை ஆற்றி சங்கத்தின் வளர்ச்சிக்கும் சமூகத்தில் சைவப்புலவர்கள் பலர் ஆங்காங்கு உருவாகிச் சைவப்பணியில் தம்மைப்போல பணிசெய்யவும் வழிகாட்டியவர். இது மாத்திரமன்றி ஈழத் திருநாட்டில் பழம்பெரும் சைவசமய ஸ்தாபனமாகிய சைவபரிபாலனசபையின் பரீட்சைச் செயலாளராக விளங்கி அகில இலங்கையிலும் பாடசாலைப் பிள்ளைகள் சைவநெறித் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றி சான்றிதழோடு தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகியவற்றினாலாய பதக்கங்களையும் வழங்கச்செய்து மாணவர்களிடையே சமய அறிவினையூட்டுபவர். மற்றும் சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலயம், பன்றிக்கோட்டுப்பிள்ளையார் ஆலயம் போன்ற சைவாலயங்களின் நிர்வாகப் பணிகளில் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றுபவர். இத்தகைய சிவப்பணிகளில் ஈடுபட்டு வரும் சைவஒழுக்கமும், பண்பாடும் ஆசார அனுட்டானமும் வாய்க்கப் பெற்ற ஒருவருக்கு ''சைவபூஷணம்'' பட்டம் வழங்கிக் கௌரவிப்பதில் சைவப்புலவர் சங்கம் பெருமைப்படுவதோடு அன்னாருக்கு வாழ்த்தும் தெரிவிக்கின்றது.

## பட்டம் பெற்றோர்:

இவ்விழாவின் போது பதினெட்டுப் பேருக்கு சைவப்புலவர் பட்டமும் முப்பத்துமூன்று பேருக்கு இளஞ் சைவப்புலவர் பட்டமும் வழங்கப்பட்டன. புராணபடனப் போட்டியில் தகைமை பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. கொழும்பிலிருந்து வெளிவரும் ''சைவநீதி'' சமய சஞ்சிகை பிரசுரிப்பாளர்கள் நடத்திய சைவசமய உயர் தகமைத் தேர்வில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன.

## நல்லை முதல்வர் ஆசி:

விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

''நமது சைவ சமூகத்தினர் ஆழ்ந்து சிந்திக்காதும் ஏனையோருடன் கலந்து பேசிச் சரியைக் கண்டறியாதும், தாம் நினைத்தவாறு முடிவெடுத்து கருமங்களைச் செய்கின்ற

(15ம் பக்கம் பார்க்க)

# சைவ மரபு பேணுக...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

னர். தவறுகளைச் சுட்டிக்காட்டினால், தாம் செய்தது பிழை என்பதை ஏற்றுக்கொண்டு திருந்த முன்வருவதில்லை. பதிலாகத் தாம் செய்த தவறுகளை நியாயப்படுத்தவே முயற்சிக்கிறார்கள்.

தாம் சமய நடைமுறைகளைப் பிழையாகச் செய்துவிட்டு, தீமை விளைந்தால் பழியை இறைவன்மீது சுமத்துவார்கள். ''எல்லாம் இறைவன் விருப்பப்படி நடைபெறுகிறது'' எனக்கூறித் தப்பித்துக்கொள்ள முயலுவார்கள். நன்மை விளைந்தால், இறைவனை மறந்து, எல்லாம் தாம் செய்த காரியங்களின் பலனாக ஏற்பட்டது என்று மார்தட்டுவார்கள். இந்த ஆணவப்போக்கு மாறவேண்டும். பிழைகளை ஏற்றுக்கொண்டு திருந்தி நடப்பதுவே பண்பு. எக்காரியத்தையும் தீர ஆராய்ந்து விடயமறிந்தவர்களுடன் கலந்துபேசி சரியான வழிமுறைகளைக் கண்டறிந்த பின்பே காரியமாற்ற வேண்டும்.

சைவசமயம் சம்பந்தமாகச் சைவ மக்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களைப் போக்க வேண்டிய பொறுப்பு சைவப்புலவர்களுக்கு உண்டு பட்டங்களைக் கருவியாகக் கொண்டு சைவப் பணி புரியவேண்டியவர்கள் சைவப் புலவர்கள். சிவப்பணி செய்பவர்கள் எவ்வாறு வாழுதல் வேண்டும் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டிக்கொண்டிருப்பவர் சைவப்புலவர் கந்தசாமி அவர்கள். அவரது பல தசாப்த பணிகளைப் போற்றிப் பாராட்டி சைவப்புலவர் சங்கத்தினர் சைவபூஷணம் பட்டமளித்து கௌரவித்திருப்பது மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தருகிறது'' என நல்லை ஆதீன முதல்வர் தமது ஆசியுரையில் கூறினார்.

## பிரதம விருந்தினர் உரை:

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பாராட்டுரை ஆற்றிய பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தமதுரையில் சைவ சமய சாதனையாளராகவும் கடமை வீரனாகவும் திகழ்ந்து சைவத்தோடு இணைந்த வாழ்க்கையை வாழ்ந்து சைவசமய வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டாற்றி வரும் மனிதநேயமிக்க ஒரு தொண்டனைக் கௌரவித்துச் சிறப்புப்பட்டம் வழங்கியமைக்காக அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினர் பராட்டுதற்குரியவர்கள் என்றும் சைவப்புலவர் கந்தசாமி அவர்களின் வாழ்க்கை முறையும் சமய நடைமுறைகளும் புதிதாகப் பட்டம் பெறுபவர்களுக்கு நல்ல முன்மாதிரியாக அமைந்துள்ளதென்றும் கூறினார்.

## பாராட்டுரை:

சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்கள் பாராட்டுரை வழங்குகையில், இன்று சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொள்ளாதவர்களும் சைவ வாழ்க்கை வாழாதவர்களும் சைவ சித்தாந்தமே தமிழ் மக்களுக்கு பெருமைதரும் மிகச் சிறந்த சித்தாந்தம் எனப் பேசியும் எழுதியும் வருகின்றனர். இது கபட நோக்கமுடையது. சைவமக்கள் இம்மயக்குகளில் வீழ்ந்து விடாது அவர்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு சைவப் புலவர்களைச் சாரும் எனக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ''பேருக்கும் புகழுக்குமாக எதையும் செய்யாத சைவப்புலவர் கந்தசாமி அவர்கள் தமக்குப் பட்டமளிக்கப்படுவதை விரும்பவில்லை. எனினும் திரு. கந்தசாமி அவர்களின் சேவையை நாம் பாராட்டிப் பட்டம் வழங்குவதானது — புதிதாகப் பட்டம் பெறுபவர்களுக்கு உற்சாக மூட்டுவதாக அமையும் — அவர்களைத் திரு. கந்தசாமி அவர்களது வழியில் சைவப் பணியாற்றத் தூண்டும் — ஆதலால் எமது கௌரவத்தை ஏற்கவேண்டும் — என வற்புறுத்திக் கூறி அவரை இணங்க வைத்தோம். புதிதாகப் பட்டம் பெற்றுள்ளவர்கள் அவரைப் போலச் சைவப்பணியாற்றதேண்டும்'' எனக்கூறினார்.

---

நடேசரபிஷேகம்: ஆவணி பூர்வ சதுர்த்தசி (01-09-2001) சனிக்கிழமை
அபிஷேககாலம்: மத்தியானம் தரிசன காலம்: சாயரட்சை

### நின்பாத தெரிசன மெனக் கருளுவாய்!

மாதவனும் நாவினுறை மாதவனும் நால்வேத
வாக்கிய முரைப்ப தொருபால்
வானவரும் அன்பினிறை வானவரும் அரகர
மாதேவ! னென்ப தொருபால்
ஆதவனு மலையமலை யாதவனு மம்புலியும்
அஞ்சலிசெய் தார்ப்ப தொருபால்
அகிலபுவ னத்துறை சனங்களுஞ் சிவசிவ
அருந்துதிகள் செய்வ தொருபால்
ஓதுறு பதஞ்சலி வியாக்கிர பதத்துமுனி
ஓங்கவொரு பாங்கு ஞற்றும்
உத்தம நிருத்தபரி சுத்தசிவ சம்புவே!
உண்மைதரு ஞான குருவே!
சீதமா மதியமணி சோதியே! நின்பாத
தெரிசன மெனக் கருளுவாய்!
சிதம்பர மெனுந்தவர் நிதம்பர விதம்பெறு
சிதம்பர மகாதே வனே!

— சுன்னாகம் முத்துக்கவிராசர்

# SIVA - WORSHIP

— Dr. N. Mahalingam —

The Lord Almighty, who is the embodiment of this Universe, and is yet apart from every manifest thing, was visualised by the ancient Tamils more than two thousand years ago, as the embodiment of Love. To them and to all of us 'Anbe Sivam' (அன்பே சிவம்) is the most endearing definition of Lord Siva.

Universe is Siva. All of us are Siva and the world's cosmogony can be best understood only through "Siva-tattvam" (சிவ தத்துவம்) It is generally accepted that this universe is the creation of the projection of the Almighty, the Supreme Force. The Rudra-concept of *Rg-Veda* gives references to the Siva-aspect of Cosmogony. Creation of the Universe is admitted by scientists to be of many million years ago.

Siva-worship is as old as creation. Siva is the most ancient God of Tamils. Siva is in all human beings in the 'Akasa' (ஆகாச) form permeating throughout the body. Only when Siva makes a motion, there is productive force. So did Lord Siva in His Lila (லீலை) with His 'Thandava' – dance (தாண்டவ நடனம்) as Sri Nataraja, set in motion all creation. Saiva-siddhanta posits that God dances in the soul and extends the life-principle to man.

The dance of Siva represents the rhythm and movement of the world spirit. One can witness the dance of Siva in the rising Sun, in the waves of the ocean, in the rotation of the planets, in lightning and thunder and in the cosmic 'Pralaya' (பிரளயம்) Without Him nothing moves.

People of ancient times worshipped Siva in the form of 'Linga'. Some of the ancient rulers of Kumari Kandam had the title 'Siva'.

A hillock in America reveals a hill called Siva This is a precious evidence of the ancient people of America being Siva-worshippers. Many more evidences of Siva temples, in places such as Columbia, Peru, Bolivia, Colorado etc., have been found.

Siva as Jothi is the concept of Saivaism Siva represented as "Jothi" is found in Gujarat, Andhra Pradesh, Tamil Nadu, Madhya Pradesh and in Maharashtra Siva is resplendent in Ramesvaram in Tamil Nadu where Siva was worshiped by Lord Rama before and after the great war with Ravana.

The spiritual unity of India is thus apparent with an added significance in the belief that no devotee can get emancipated unless he bathes in the Ganges and has darsana of (தரிசனம்) Lord Visvesvara and also bathes in the Setu - samudram and gets darsana of Lord Siva at Ramesvaram.

Furthermore, Siva-aspect is fivefold - as Prthvi (earth), Appu (water). Theyu (agni), Vayu (air) and akasa (ether). In Kancipuram Siva is in Prthvi-rupa ardently worshipped by Devi Kamaksi herself The Appu form is in Tiruvanaikaval in Tiruchirapalli district while the Theyu rupam of Siva is found in Tiruvannamalai famous for its Karthigai Dipotsavam. In Tirukalathi (Kalahasti) the Vayu-form was worshipped from ancient days The puranas say that a spider, snake and elephant attained salvation. In the garbhagraha, there is an eternal flickering flame due to the slow motion of air which has been created by the great architect. In the sacred Chidambaram in South Arcot District, Siva is Akasa and Siva Tandava (dance) by Lord Nataraja keeps humanity alive.

We witness Siva in his grand dance-forms in Chidambaram, Tiruvalangadu, Madurai and Tirunelveli which are classified as Ananda-tandavam, Kalibhanga-tandavam (or Samhara-tandavam) and Sandhya-tandavam. There are other types of dances as well. For example in Tirukutralam it is Tripura Tandavam while in Perur it is Urdhva-Tripura-Tandavam. In Tirumudisvaram, it is Azhagiya Natanam, while it is Ajapa-Natanam in Tiruvarur, Unmatta-Tandavam in Tirunallar, Kukkuta-Natanam in Tirukkaravayal, Hamsapada-Natanam in Vedaranyam, Bhringi-Natanam in Tirukkolli, Muka-mandala thandavam in Ananthathandavaram and Kalmaria Natanam in Madurai.

There can be no doubt that our ancients chose the Supreme Lord Siva as their own for special worship. He is the only God who is recognised as both in the Nirguna and Saguna forms as the Upanishads rightly proclaim. Visnu and Brahma of the Trinity are only Saguna deities. Siva alone is eternity without beginning or end indicative of his Nirguna Brahmattvam.

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Saiva Paripalana Sabai - Jaffna of 450, K. K. S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K. K. S. Road, Jaffna. 03-08-2001 (Fullmoon Day).